# ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு
## மானியக் கோரிக்கை எண். 4

**2019-2020**

**திருமதி. வி.எம். ராஜலெட்சுமி**
ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை
அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2019

# பொருளடக்கம்


| தொடர் எண். | பொருள் | பக்கம் |
|---|---|---|
| | முன்னுரை | 1 |
| I. | **ஆதி திராவிடர் நலன்** | 3 |
| 1. | கல்வி | 4 |
| | 1.1 கல்வி உதவித்தொகைகள் | 5 |
| | 1.2 கல்விக் கட்டணச் சலுகைகள் | 17 |
| | 1.3 பெண் கல்வி ஊக்கத்தொகைத் திட்டம் | 21 |
| | 1.4 பரிசுத் தொகைத் திட்டம் | 22 |
| | 1.5 பாடப்புத்தகங்கள் மற்றும் குறிப்பேடுகள் வழங்குதல் | 22 |
| | 1.6 சீருடைகள் வழங்குதல் | 23 |
| | 1.7 பருவ இதழ்கள் மற்றும் புத்தகங்கள் வழங்குதல் | 24 |
| | 1.8 மிதிவண்டிகள் வழங்குதல் | 25 |
| | 1.9 நற்பெயர் பெற்ற பள்ளிகளில் 6 ஆம் வகுப்பில் மாணாக்கரை சேர்க்கும் திட்டம் | 25 |
| | 1.10 நற்பெயர் பெற்ற பள்ளிகளில் 11 ஆம் வகுப்பில் மாணாக்கரை சேர்க்கும் திட்டம் | 26 |
| | 1.11 விடுதிகள் | 28 |
| 2 | ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குதல் | 35 |
| 3 | மயானங்கள் மற்றும் மயானப் பாதை வசதி | 36 |
| 4 | ஈமச்சடங்கு உதவித் தொகை | 37 |
| 5 | ஆதி திராவிடர் துணைத் திட்டம் (SCSP) | 37 |

| | | |
|---|---|---|
| **6** | ஆதி திராவிடர் துணைத் திட்டத்திற்கான மைய அரசின் சிறப்பு நிதியுதவித் திட்டம் (SCA to SCSP) | 39 |
| **7** | சாதிச் சான்றிதழ்கள் | 41 |
| **8** | 1955ஆம் ஆண்டு குடிமையியல் பாதுகாப்புச் சட்டம், SC மற்றும் ST (வன்கொடுமைத் தடுப்பு) சட்டம், 1989 மற்றும் திருத்தச் சட்டம், 2015 | 42 |
| **9** | தமிழ்நாடு ஆதி திராவிடர் கலை மற்றும் இலக்கிய மேம்பாட்டுச் சங்கம் | 49 |

| | | |
|---|---|---|
| **II.** | **பழங்குடியினர் நலன்** | |
| | முன்னுரை | 51 |
| **1** | கல்வி | 53 |
| 2 | மைய அரசின் திட்டங்கள் | 56 |
| | (அ) பழங்குடியினர் துணைத்திட்டத்திற்கான சிறப்பு மைய நிதியுதவி | 56 |
| | (ஆ) இந்திய அரசியலமைப்புச் சட்டக்கூறு 275(1) | 57 |
| | (இ) அழிவின் விளிம்பிலுள்ள பண்டைய பழங்குடியினர் மேம்பாடு | 58 |
| | (ஈ) பழங்குடியினர் மற்றும் பிற மரபு வழியாக வனங்களில் குடியிருப்போர் (வன உரிமைகள் அங்கீகரித்தல்) 2006 சட்டத்தை செயல்படுத்துதல் | 60 |
| **3.** | **மாநிலத் திட்டங்கள்** | |
| | அ) விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் | 62 |
| | ஆ) ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் | 66 |

| | | |
|---|---|---|
| | இ) தொழில் நெறி வழிகாட்டும் மையம் | 67 |
| | ஈ) தொழிற்பயிற்சி நிலையங்கள் (ITIs) | 67 |
| **4** | பழங்குடியினர் சாதிச் சான்றிதழ் மெய்த்தன்மை சரிபார்த்தல் | 68 |
| **5** | பழங்குடியினர் ஆராய்ச்சி மையம் | 72 |
| **6** | பழங்குடியினர் துணைத் திட்டம் | 74 |

| | | |
|---|---|---|
| **III.** | **தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ)** | |
| | முன்னுரை | 76 |
| **1** | பங்கு மூலதனம் | 76 |
| **2** | தாட்கோவின் நடவடிக்கைகள் | 77 |
| | **2.1** பொருளாதார மேம்பாட்டு நடவடிக்கைகள் | 77 |
| | **2.2** திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் | 92 |
| | **2.3** கட்டுமானப் பிரிவு | 95 |

| | | |
|---|---|---|
| **IV.** | **2019-20 ஆம் ஆண்டில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைக்கான நிதி ஒதுக்கீடு** | 98 |

# ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை

# கொள்கை விளக்கக் குறிப்பு

# 2019–2020

## முன்னுரை

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சீரிய தலைமையிலான தமிழ்நாடு அரசு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களை சமுதாயத்தில் உள்ள இதர பிரிவினருக்கு இணையாக சமூகம், பொருளாதாரம் மற்றும் கல்வி நிலையில் முன்னேற்றும் பொருட்டு பல்வேறு திட்டங்களை தீட்டி செயல்படுத்தி வருகிறது.

2011-ஆம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, தமிழ்நாட்டின் மொத்த மக்கள் தொகையான 7.21 கோடியில், ஆதி திராவிடர் இன மக்கள் 1.44 கோடியும் (20.01%), பழங்குடியின மக்கள் 7.95 இலட்சமும் (1.10%) இருக்கின்றனர். சமூக, பொருளாதார, கல்வி முன்னேற்றத்திற்கு தேவையான சமூக கட்டமைப்பினை ஏற்படுத்தி, சமூக நீதியினை நிலைநாட்டி



ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக பல்வேறு நலத்திட்டங்களை உருவாக்கி செயல்படுத்துவதில் இவ்வரசு முனைப்புடன் உள்ளது. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்காக பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி அவர்களின் வளர்ச்சியை உறுதிப்படுத்திட, 2019-2020-ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் **ரூ.3810.28 கோடி** நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணாக்கருக்கு தரமான கல்வி வழங்கி அவர்கள் வாழ்க்கைத் தரம் உயர்வடைய இவ்வரசு சிறப்பு முக்கியத்துவம் அளிக்கிறது. 2019-2020-ஆம் நிதியாண்டின் வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ரூ.**3810.28** கோடி நிதியில், கல்வி மற்றும் கல்வி சார்ந்த திட்டங்களுக்காக ரூ.**3343.80** கோடி (87.76 விழுக்காடு) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

# I. ஆதி திராவிடர் நலன்

பிற மாநிலங்களில் பட்டியல் இனத்தவர் எனவும், தமிழ்நாட்டில் ஆதி திராவிடர் எனவும் குறிப்பிடப்படும் இம்மக்களின் கண்ணியம் மற்றும் பாதுகாப்பினை உறுதிப்படுத்தவும், அனைத்து வகையான விலக்கல், ஒதுக்குதல், தீண்டாமை மற்றும் பாகுபாடு போன்றவற்றை களையவும், சமூக சமத்துவத்திற்கான உரிமையை உறுதிப்படுத்தவும், அரசு பல கொள்கைகள், திட்டங்கள், வரவு செலவுத் திட்டங்கள் மற்றும் செயல்முறைத் திட்டங்களை உருவாக்கி வருகிறது.

மேலும், நவீன தமிழகத்தில் கிராமப்புறங்களில் வசிக்கும் ஆதி திராவிடர்களின் பெருகிவரும் இடர்பாடுகளை எதிர்கொள்ள பேரூராட்சி, நகராட்சி மற்றும் மாநகராட்சிப் பகுதிகளில் மானியத்துடன் கூடிய வேறுபட்ட அளவிலான கடன்கள் பொருளாதார மேம்பாட்டிற்காகவும், வணிக நிறுவனங்களை அமைக்கவும், விவசாய நிலம் வாங்குவதற்காகவும் வழங்கப்படுவதுடன், வீடு கட்டும் நோக்கத்திற்காக இலவச வீட்டு மனைகளும் வழங்கப்படுகின்றன.



## 1. கல்வி

இவ்வரசு, ஆதி திராவிடர் நலப் பள்ளிகளை திறம்பட இயங்கச் செய்து, பெரும்பான்மையான ஆதி திராவிடர் மாணாக்கருக்கு கல்வி உதவித் தொகையினை வழங்கி, விடுதி வசதிகளை தொடர்ந்து ஏற்படுத்தி வருவதன் மூலம் ஆதி திராவிடர் மாணாக்கரின் கல்வியறிவு வளர்ச்சி வீதம் மற்றும் கல்வித்தரம் ஆகியவற்றில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியினை ஏற்படுத்தி வருகிறது.

கல்வியில் நிலையான முன்னேற்றம் அடையச் செய்யும் பொருட்டு, ஆதி திராவிடர் மக்கள் அதிகமாக வசிக்கும் பகுதிகளில், இத்துறையால் 1135 பள்ளிகள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.

### பள்ளிகளின் விவரம்

| விவரம் | பள்ளிகள் எண்ணிக்கை | மாணாக்கர் எண்ணிக்கை |
|---|---|---|
| தொடக்கப் பள்ளி | 836 | 35,338 |
| நடுநிலைப் பள்ளி | 96 | 9,063 |
| உயர்நிலைப் பள்ளி | 116 | 14,046 |
| மேல்நிலைப் பள்ளி | 87 | 34,309 |
| மொத்தம் | 1,135 | 92,756 |

## 1.1. **கல்வி உதவித்தொகைகள்**

பெரும்பாலும் விவசாயத்தைச் சார்ந்த வேலைகளில் ஈடுபட்டுள்ள ஆதி திராவிடர் மக்களின் வாழ்க்கை நிலை மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளதால், கல்வி நிறுவனங்களால் விதிக்கப்படும் கட்டணங்களை இவர்களால் செலுத்த இயலாத நிலை உள்ளது. எனவே, இவ்வின மக்களையும் கல்வி கற்க ஊக்கப்படுத்தும் வகையில் இவ்வரசு, கீழ்க்காணும் பல்வேறு கல்வி உதவித்தொகைகளுடன் கட்டணச் சலுகைகளையும் வழங்கி வருகிறது.

### (அ) மைய அரசு போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை

பத்தாம் வகுப்பிற்கு மேற்பட்ட அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களில் அங்கீகரிக்கப்பட்ட படிப்புகளை பயிலும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணாக்கருக்கு அவர்களுடைய பெற்றோர் அல்லது பாதுகாவலரின் வருட வருமானம் ரூ.2.50 இலட்சத்திற்கு மேற்படாமல் இருப்பின், இக்கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் பராமரிப்புப் படியுடன் கல்வி நிறுவனத்திற்கு மாணாக்கர்



செலுத்த வேண்டிய திரும்ப அளிக்கப்படாத கட்டணங்கள் உதவித்தொகையாக வழங்கப்படுகின்றன.

### பராமரிப்புப் படிகள்

இத்திட்டத்தின் கீழ் மாணாக்கருக்கு வழங்கப்படும் படிப்புவாரியான பராமரிப்புப் படி தொகை விவரங்கள் கீழே அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன.

| தொகுதி | படிப்புகள் | ஒரு மாதத்திற்கான பராமரிப்புப் படி (ரூபாயில்) | |
|---|---|---|---|
| | | விடுதி மாணாக்கர் | வெளி மாணாக்கர் (Day Scholar) |
| I | (i) மருத்துவம், பொறியியல், தொழில்நுட்பம், வரைகலை (Planning) கட்டடக்கலை, வடிவமைப்பு, நவீன ஆடை தொழிற்நுட்பம் (Fashion Technology), வேளாண்மை, கால்நடை | 1200 | 550 |

| தொகுதி | படிப்புகள் | ஒரு மாதத்திற்கான பராமரிப்புப் படி (ரூபாயில்) | |
|---|---|---|---|
| | | விடுதி மாணாக்கர் | வெளி மாணாக்கர் (Day Scholar) |
| | மற்றும் அதைச்சார்ந்த அறிவியல் படிப்புகளில் பட்டப்படிப்பு மற்றும் முதுநிலை பட்டப்படிப்பு | 1200 | 550 |
| | (ii) மேலாண்மை மற்றும் மருத்துவம் சார்ந்த பல்வேறு படிப்புகளில் முதுநிலை பட்டயம் | ---- | 550 |
| | (iii) CA/CWA/CS/ICFA etc., | | |
| | (iv) M.Phil, Ph.D., & Post Doctoral programmes | 1200 | 550 |
| II | 12 ஆம் வகுப்பு படிப்பினை நுழைவுத் தகுதியாக கொண்ட தொழில் கல்வியில் | 820 | 530 |



| தொகுதி | படிப்புகள் | ஒரு மாதத்திற்கான பராமரிப்புப் படி (ரூபாயில்) | |
|---|---|---|---|
| | | விடுதி மாணாக்கர் | வெளி மாணாக்கர் (Day Scholar) |
| | பட்டப்படிப்பு, பட்டயம் மற்றும் சான்றிதழ் படிப்பில் மருந்தாக்கியல், செவிலியர், LLB, விருந்தோம்பல், சுற்றுலா மற்றும் ஹோட்டல் மேலாண்மை போன்ற படிப்புகள் மற்றும் தொகுதி I-ல் சாராத முதுநிலைப் பட்டப் படிப்புகள் (எ.கா. M.A.,/ M.Sc., / M.Com., / M.Ed., / M.Pharm., etc., | | |
| III | தொகுதி I மற்றும் II–ல் இடம் பெறாத இதர பட்டப்படிப்பு மற்றும் முதுநிலை பட்டப்படிப்புகள் | 570 | 300 |
| IV | 10 ஆம் வகுப்பு படிப்பினை நுழைவுத் தகுதியாகக் கொண்ட பட்டப்படிப்பு அல்லாத படிப்புகள் | 380 | 230 |

| தொகுதி | படிப்புகள் | ஒரு மாதத்திற்கான பராமரிப்புப் படி (ரூபாயில்) | |
|---|---|---|---|
| | | விடுதி மாணாக்கர் | வெளி மாணாக்கர் (Day Scholar) |
| | (எ.கா. XI, XII, ITI, தொழில் பயிற்சிக் கல்வி etc.,) | | |

மேலும், அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்வி நிலையங்களில் பயில்பவர்களுக்கு மேற்குறிப்பிட்ட பராமரிப்புப் படியுடன் கல்வி நிறுவனத்திற்கு மாணாக்கர் செலுத்த வேண்டிய திரும்ப அளிக்கப்படாத கட்டணங்கள் உதவித் தொகையாக மாணாக்கரின் வங்கி சேமிப்புக் கணக்குகளில் அரசால் வரவு வைக்கப்படுகின்றன.

சுயநிதி தொழிற் படிப்புக் கல்லூரிகளில் அரசு ஒதுக்கீட்டு இடங்களில் சேர்ந்து கல்வி பயிலும் ஆதிதிராவிடர் மாணாக்கருக்காக, அரசால் நியமிக்கப்பட்ட சுயநிதிக் கல்லூரிகளுக்கான கட்டண நிர்ணயக் குழுவால் நிர்ணயிக்கப்பட்ட கட்டாய மற்றும் திரும்ப பெற இயலாத



கட்டணங்கள் கல்வி நிலையங்களின் கணக்குகளில் நேரடியாக அரசால் ஈடுசெய்யப்படுகின்றன.

சுயநிதி தொழிற் படிப்புக் கல்லூரிகளில் கல்வி பயிலும் பழங்குடியின மாணாக்கரால் கல்வி நிறுவனங்களுக்கு செலுத்தப்படவேண்டிய, அரசால் நியமிக்கப்பட்ட சுயநிதிக் கல்லூரிகளுக்கான கட்டண நிர்ணயக்குழுவால் நிர்ணயிக்கப்பட்ட கட்டாய மற்றும் திரும்ப பெற இயலாத கட்டணங்கள் அம்மாணாக்கர் சார்பாக கல்வி நிறுவனங்களின் கணக்குகளில் நேரடியாக அரசால் ஈடுசெய்யப்படுகின்றன.

இத்திட்டத்தின் கீழ் 2019-2020-ஆம் நிதியாண்டில், ஆதி திராவிடர் மாணாக்கருக்கு ரூ.1727.95 கோடியும், பழங்குடியின மாணாக்கருக்கு ரூ.46.44 கோடியும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(ஆ) மாநில அரசின் சிறப்பு போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை**

மைய அரசு போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டத்தின்கீழ் பயன்பெற இயலாத ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் இன மாணாக்கருக்கு அவர்தம் பெற்றோர் அல்லது பாதுகாவலரின் வருட வருமானம்

ரூ.2.50 இலட்சத்திற்கு மிகாமல் இருப்பின், மாநில அரசின் சிறப்பு போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் பராமரிப்புப் படியுடன் கல்வி நிறுவனத்திற்கு மாணாக்கர் செலுத்த வேண்டிய திரும்ப அளிக்கப்படாத கட்டணங்கள் உதவித்தொகையாக வழங்கப்படுகிறது.

**பராமரிப்புப் படிகள்**

இத்திட்டத்தின் கீழ் மாணாக்கருக்கு வழங்கப்படும் படிப்புவாரியான பராமரிப்புப் படி தொகை விவரங்கள் கீழே அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன.

| தொகுதி | படிப்புகள் | ஒரு மாதத்திற்கான பராமரிப்புப் படி (ரூபாயில்) | |
|---|---|---|---|
| | | விடுதிகளில் தங்கி பயிலும் மாணாக்கர் | வெளி மாணாக்கர் (Day Scholar) |
| I | பொறியியல், மருத்துவம் | 350 | 175 |



| தொகுதி | படிப்புகள் | ஒரு மாதத்திற்கான பராமரிப்புப் படி (ரூபாயில்) | |
|---|---|---|---|
| | | விடுதிகளில் தங்கி பயிலும் மாணாக்கர் | வெளி மாணாக்கர் (Day Scholar) |
| II | கலை, அறிவியல் முதுகலை பட்டப்படிப்பு | 225 | 140 |
| III | கலை, அறிவியல் இளங்கலை பட்டப்படிப்பு | 175 | 100 |
| IV | ஐ.டி.ஐ. / +1, +2 | 175 | 100 |

அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்வி நிலையங்களில் பயில்பவர்களுக்கு மேற்குறிப்பிட்ட பராமரிப்புப் படியுடன், கல்வி நிறுவனத்திற்கு மாணாக்கர் செலுத்த வேண்டிய திரும்ப அளிக்கப்படாத கட்டணங்கள், உதவித்தொகையாக மாணாக்கரின் வங்கி சேமிப்புக் கணக்குகளில் அரசால் வரவு வைக்கப்படுகின்றன.

சுயநிதிக் கல்லூரிகளில் அரசு ஒதுக்கீட்டு இடங்களில் சேர்ந்து கல்வி பயிலும் மாணாக்கருக்காக, அரசு / அரசால் நியமிக்கப்பட்ட சுயநிதிக் கல்லூரிகளுக்கான கட்டண நிர்ணயக் குழுவால் நிர்ணயிக்கப்பட்ட கட்டாய மற்றும் திரும்ப பெற இயலாத கட்டணங்கள் கல்வி நிலையங்களின்

கணக்குகளில் நேரடியாக அரசால் வரவு வைக்கப்படுகின்றன. மேலும், பராமரிப்பு படி உதவித் தொகையாக மாணாக்கரின் வங்கிக் கணக்குகளில் அரசால் வரவு வைக்கப்படுகிறது.

இத்திட்டத்திற்கென 2019-2020-ஆம் நிதியாண்டில், ஆதி திராவிடர் மாணாக்கருக்காக ரூ.82.74 கோடியும், பழங்குடியின மாணாக்கருக்காக ரூ.1 இலட்சமும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### (இ) மைய அரசின் ப்ரிமெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டங்கள்

#### (i) தூய்மைப் பணி மற்றும் சுகாதாரமற்ற பணிகளில் ஈடுபடுவோரின் குழந்தைகளுக்கான கல்வி உதவித் தொகைத் திட்டம்

அரசால் அங்கீகரிக்கப்பட்ட பள்ளிகளில் 1 முதல் 10–ஆம் வகுப்பு வரை பயிலும் துப்புரவு பணியாளர், தோல் பதனிடுதல், தோல் உரித்தல் மற்றும் கழிவு பொருட்களிலிருந்து மறுசுழற்சிக்கு உகந்த பொருட்களை பிரித்து சேகரிப்பவர் ஆகியோர்களின் குழந்தைகளுக்கு இக்கல்வி உதவித்தொகை பின்வருமாறு வழங்கப்படுகிறது.:-

| | வெளி மாணாக்கர் (Day Scholar) | விடுதியில் தங்கி படிக்கும் மாணாக்கர் |
|---|---|---|
| பராமரிப்புப் படி (ஒரு மாதத்திற்கு) | ரூ.225/– | ரூ.700/– |
| தனி மானியம் (ஒரு வருடத்திற்கு) | ரூ.750/– | ரூ.1000/– |



பராமரிப்புப் படியும் தனிமானியமும் மாணாக்கரின் வங்கிக் கணக்குகளில் அரசால் வரவு வைக்கப்படுகின்றன.

இந்த திட்டத்திற்கு 2019-2020-ஆம் நிதியாண்டில் ரூ.12.31 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

#### (ii) 9 மற்றும் 10–ஆம் வகுப்புகளில் பயிலும் ஆதிதிராவிடர் / பழங்குடியின மாணாக்கருக்கான கல்வி உதவித்தொகைத் திட்டம்

அரசு மற்றும் அரசு அங்கீகாரம் பெற்ற அல்லது மத்திய / மாநில கல்வி வாரியங்களால் அங்கீகரிக்கப்பட்ட பள்ளிகளில் ஒன்பது மற்றும் பத்தாம் வகுப்புகளில் முழு நேர கல்வி பயிலும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணாக்கருக்கு அவர்களின் பெற்றோர் / பாதுகாவலர் ஆண்டு வருமானம் முறையே ரூ.2.50 இலட்சம் / ரூ.2 இலட்சத்திற்கு மிகாமல்

இருப்பின் உதவித்தொகை கீழ்க்கண்டவாறு மாணாக்கரின் வங்கிக் கணக்குகளில் வரவு வைக்கப்படுகிறது:-

| | வெளி மாணாக்கர் (Day Scholar) | விடுதி மாணாக்கர் |
|---|---|---|
| பராமரிப்புப் படி (ஒரு மாதத்திற்கு) | | |
| ஆதி திராவிடர் | ரூ.225/– | ரூ.525/– |
| பழங்குடியினர் | ரூ.150/– | ரூ.350/– |
| தனி மானியம் ( ஒரு ஆண்டுக்கு) | | |
| ஆதிதிராவிடர் / பழங்குடியினர் | ரூ.750/– | ரூ.1000/– |

மேற்கண்ட திட்டத்திற்கென 2019-2020-ஆம் நிதியாண்டில் ஆதிதிராவிடர் மாணாக்கருக்காக ரூ.102.63 கோடி மற்றும் பழங்குடியின மாணாக்கருக்காக ரூ.4.10 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### (ஈ) மாநில அரசின் உயர் கல்வி சிறப்பு படிப்புதவித்தொகை

இத்திட்டத்தின் கீழ் அரசு மற்றும் அரசு உதவி பெறும் கட்டண விடுதிகளில் தங்கி அரசு மற்றும் அரசு உதவி பெறும்



கல்வி நிறுவனங்களில் இளநிலை பட்டப்படிப்பு மற்றும் தொழில் நுட்ப பட்டயப் படிப்பு பயிலும் ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் மாணாக்கருக்கு அவர்தம் பெற்றோர் அல்லது பாதுகாவலரின் வருட வருமானம் ரூ.2.50 இலட்சத்திற்கு மிகாமல் இருப்பின் ஆண்டு ஒன்றுக்கு ரூ.7500/–ம் முதுநிலை பட்டப்படிப்பு மற்றும் தொழிற்படிப்பு பயில்வோருக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ.8000/–ம் சிறப்பு உதவித்தொகையாக மாணாக்கரின் வங்கிக் கணக்குகளில் வரவு வைக்கப்படுகிறது.

இத்திட்டத்திற்கென **2019–2020–**ஆம் நிதியாண்டில், ஆதி திராவிடர் மாணாக்கருக்காக ரூ.**26.19** கோடி மற்றும் பழங்குடியின மாணாக்கருக்காக ரூ.**26.46** இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### (உ) வெளிநாட்டில் முதுகலைப்பட்டம் மற்றும் அதற்கு மேற்பட்ட ஆராய்ச்சி படிப்புகளை பயில்வோருக்கான கல்வி உதவித்தொகைத் திட்டம்

வெளிநாடுகளில் பொறியியல், தொழில்நுட்பவியல், மருத்துவம், அறிவியல் பாடப்பிரிவுகளில் முதுகலைப்பட்டம்

மற்றும் அதற்கு மேற்பட்ட முனைவர் ஆராய்ச்சி படிப்பை படிக்க விரும்பும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணாக்கருக்கு அவர்களின் பெற்றோர் அல்லது பாதுகாவலரின் வருட வருமானம் ரூ.3 இலட்சத்திற்கு மிகாமல் இருப்பின் இந்த உதவித்தொகை வழங்கப்படுகிறது.

இத்திட்டத்திற்கென 2019-2020-ஆம் நிதியாண்டில், ரூ.30 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(ஊ) முழுநேர முனைவர் ஆராய்ச்சிப் படிப்பிற்கு நிதியுதவி**

தமிழ்நாட்டில் உள்ள மத்திய அரசு மற்றும் மாநில அரசால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களில் மருத்துவம், பொறியியல், கலை, அறிவியல், சட்டம், இலக்கியம், அரசியல் அறிவியல் (Political Science) போன்ற படிப்புகளில் முழுநேர முனைவர் ஆராய்ச்சி படிப்பை மேற்கொள்ளும் 1200 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணாக்கருக்கு அவர்களின் பெற்றோர் அல்லது பாதுகாவலரின் வருட வருமானம் ரூ.2.50 இலட்சத்திற்கு மிகாமல் இருப்பின், ஆண்டு தோறும் ரூ.50,000/- வீதம் அதிகபட்சமாக ஐந்து ஆண்டுகளுக்கு ஊக்கத்தொகை மாணாக்கரின் வங்கிக் கணக்குகளில் வரவு வைக்கப்படுகிறது.



இத்திட்டத்திற்கென 2019-2020-ஆம் நிதியாண்டில், ரூ.6 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 1.2. கல்வி கட்டணச் சலுகைகள்

**(அ) கற்பிப்புக் கட்டணச் சலுகை**

அரசு மற்றும் அரசு உதவிபெறும் கல்வி நிறுவனங்களில் கல்வி பயிலும் ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் இன மாணாக்கர், அவர்தம் பெற்றோர்/ பாதுகாவலரது வருமான உச்ச வரம்பு எதுவும் இல்லாமல், கல்வி நிலையங்களுக்கு கற்பிப்புப் கட்டணம் செலுத்துவதிலிருந்து முழுமையாக விலக்களிக்கப்பட்டுள்ளனர். இதனால் கல்வி நிலையங்களுக்கு செலுத்தப்பட வேண்டிய கற்பிப்புக் கட்டணம் அரசால் ஈடுகட்டப்படுகிறது.

இத்திட்டத்திற்கென 2019-2020-ஆம் நிதியாண்டில், ஆதி திராவிடர் மாணாக்கருக்காக ரூ.7.72 கோடி மற்றும் பழங்குடியின மாணாக்கருக்காக ரூ.8.51 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(ஆ) இளங்கலை மாணாக்கருக்கு சலுகைகள்**

அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் கலை, அறிவியல் கல்லூரிகளில் இளங்கலை பட்டப்படிப்பு பயிலும் ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் இன மாணாக்கர், அவர்தம் பெற்றோர்/ பாதுகாவலரது வருமான உச்ச வரம்பு எதுவும் இல்லாமல், சிறப்புக் கட்டணம் மற்றும் தேர்வுக்கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளனர்.

இத்திட்டத்திற்கென 2019-2020-ஆம் நிதியாண்டில், ஆதி திராவிடர் மாணாக்கருக்காக ரூ.4 இலட்சம் மற்றும் பழங்குடியின மாணாக்கருக்காக ரூ.**4** இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### (இ) முதுகலை மாணவியருக்கு சலுகைகள்

அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் முதுகலை பட்டப்படிப்பு பயிலும் ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் கிருத்துவ மதத்திற்கு மாறிய ஆதி திராவிடர் இன மாணவியர் வருமான உச்ச வரம்பின்றி, சிறப்புக் கட்டணம் மற்றும் தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளனர்.



இத்திட்டத்திற்கென 2019-2020-ஆம் நிதியாண்டில், ஆதி திராவிடர் மாணாக்கருக்காக ரூ.2.50 இலட்சம் மற்றும் பழங்குடியின மாணாக்கருக்காக ரூ.**2.50** இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### (ஈ) ஆங்கில வழி பயிலும் மாணாக்கருக்கு சிறப்பு மற்றும் கற்பிப்புக் கட்டணச் சலுகை

ஆதி திராவிடர் நல மற்றும் அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் 6-ஆம் வகுப்பு முதல் 12–ஆம் வகுப்பு வரை படிக்கும் அனைத்து மாணாக்கருக்கும் சிறப்புக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டு இந்த கட்டணம் கல்வி நிலையங்களுக்கு அரசால் நேரடியாக விடுவிக்கப்படுகிறது.

இத்திட்டத்திற்கென 2019-2020-ஆம் நிதியாண்டில், ஆதி திராவிடர் மாணாக்கருக்காக ரூ.1.71 கோடி மற்றும் பழங்குடியின மாணாக்கருக்காக ரூ.**3.04** இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### (உ) இதர கட்டணச் சலுகைகள்

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில், 10, 11 மற்றும் 12-ஆம் வகுப்புகளில் பயிலும் ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் இன மாணாக்கர் **தேர்வுக் கட்டணம்** செலுத்துவதில் இருந்து விலக்களிக்கப்பட்டுள்ளனர். இக்கட்டணம் அரசு தேர்வுகள் இயக்ககத்திற்கு நேரடியாக இத்துறையால் ஈடு செய்யப்படுகிறது.

அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளில் இளங்கலை, முதுகலை மற்றும் தொழிற் கல்வி படிப்புகளுக்கு **விண்ணப்பக் கட்டணம்** மற்றும் **பதிவுக் கட்டணம்** செலுத்துவதிலிருந்து ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் மாணாக்கருக்கு விலக்களிக்கப்பட்டுள்ளது. இக்கட்டணங்கள் கல்வி நிலையங்களுக்கு அரசால் நேரடியாக ஈடு செய்யப்படுகின்றன.

இத்திட்டத்திற்கென 2019-2020-ஆம் நிதியாண்டில், ஆதி திராவிடர் மாணாக்கருக்காக ரூ.2.90 கோடி மற்றும் பழங்குடியின மாணாக்கருக்காக ரூ.7.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



## 1.3. பெண்கல்வி ஊக்கத் தொகைத் திட்டம்

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணவியர் 100 விழுக்காடு பள்ளியில் சேர்வதை உறுதி செய்வதற்கும், அவர்களது இடைநிற்றலை (Drop out) குறைப்பதற்காகவும், பெண் கல்வி ஊக்கத் தொகைத் திட்டம் மாநில அரசால் செயல்படுத்தப்படுகிறது. அரசால் வழங்கப்படும் ஊக்கத் தொகை விவரம் பின்வருமாறு :

| வகுப்பு | தொகை (ஆண்டொன்றுக்கு) | 2019–20 நிதி ஒதுக்கீடு |
|---|---|---|
| 3 முதல் 5 வரை | ரூ.500/– | ஆதி திராவிடர் ரூ.11.47 கோடி பழங்குடியினர் ரூ.75 இலட்சம் |
| 6 | ரூ.1000/– | ஆதி திராவிடர் ரூ.34.37 கோடி பழங்குடியினர் ரூ.1.50 கோடி |
| 7 மற்றும் 8 | ரூ.1500/– | |

## 1.4. பரிசுத் தொகைத் திட்டம்

இளங்கலை பட்டப்படிப்பு, முதுகலை பட்டப்படிப்பு மற்றும் தொழில்நுட்பப் படிப்புத் தேர்வுகளில் 60 விழுக்காடு மற்றும் அதற்கு மேல் மதிப்பெண் பெறும் முதல் 1000 ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் இன மாணாக்கருக்கு பரிசுத் தொகை பின்வருமாறு வழங்கப்படுகிறது:

| படிப்பு | தொகை (ஒருவருக்கு) | 2019–20 நிதி ஒதுக்கீடு |
|---|---|---|
| இளங்கலை | ரூ.3000/– | ரூ.42.00 இலட்சம் |
| முதுகலை | ரூ.5000/– | |
| தொழில்நுட்பப் படிப்பு | ரூ.6000/– | |

## 1.5. பாடப்புத்தகங்கள் மற்றும் குறிப்பேடுகள் வழங்குதல்

இத்துறையைச் சார்ந்த பள்ளிகளில் 1 முதல் 12-ஆம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கருக்கு பாடப் புத்தகங்களும், 1 முதல் 10-ஆம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கருக்கு



குறிப்பேடுகளும் பள்ளிக் கல்வித் துறையால் வழங்கப்படுகின்றன.

இத்திட்டத்திற்கென 2019-2020-ஆம் நிதியாண்டில் ரூ.1.80 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 1.6. சீருடைகள் வழங்குதல்

ஆதி திராவிடர் நல மற்றும் பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகள் மற்றும் இத்துறையால் நடத்தப்படும் பள்ளி விடுதிகளில் தங்கி கல்வி பயிலும் மாணாக்கருக்கு நான்கு இணை சீருடைகள் பின்வருமாறு வழங்கப்படுகின்றன:-

| வ. எண். | வகுப்பு | வழங்கும் துறை |
|---|---|---|
| 1. | 1 முதல் 8 வரை | சமூக நலத்துறை |
| 2. | 9 முதல் 12 வரை | தொழிற் கூட்டுறவு சங்கங்கள் |
| 3. | விடுதி மாணாக்கர் | தொழிற் கூட்டுறவு சங்கங்கள் |

இத்திட்டத்திற்கென 2019-2020-ஆம் நிதியாண்டில் ரூ.13 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 1.7. பருவ இதழ்கள் மற்றும் புத்தகங்கள் வழங்குதல்

இத்துறையால் நடத்தப்படும் உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் கல்லூரி விடுதிகளில் தங்கி கல்வி பயிலும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணாக்கரின் பொது அறிவுத் திறனை மேம்படுத்தவும், அவர்கள் குடிமைப் பணி தேர்வுகள் மற்றும் இதர போட்டித் தேர்வுகளுக்கு தயாராகவும் புத்தகங்கள் மற்றும் பருவ இதழ்கள் பின்வருமாறு வாங்கி வழங்கப்படுகின்றன:-

| வ. எண் | பள்ளிகள் / விடுதிகள் | நூலக புத்தகங்கள் | பருவ இதழ்கள் |
|---|---|---|---|
| | | ( ஆண்டு ஒன்றுக்கு) | |
| 1. | உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகள் | ரூ.1000/– | ரூ.450/– |
| 2. | பள்ளி விடுதிகள் | –– | ரூ.450/– |
| 3. | கல்லூரி விடுதிகள் | –– | ரூ.3100/– |

இத்திட்டத்திற்கென 2019-2020-ஆம் நிதியாண்டில் ரூ.18.66 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



## 1. 8. மிதிவண்டிகள் வழங்குதல்

அரசு, அரசு நிதியுதவி பெறும் பள்ளிகள் மற்றும் பகுதியாக அரசு நிதியுதவி பெறும் மேல்நிலைப் பள்ளிகளில், 11-ஆம் வகுப்பு பயிலும் ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் மாணாக்கருக்கும், 11-ஆம் வகுப்பில் மிதிவண்டிகள் வழங்காமல் விடுபட்டு, 12-ஆம் வகுப்பில் பயிலும் மாணாக்கருக்கும் மிதிவண்டிகள் வழங்கப்படுகின்றன.

இத்திட்டத்திற்கென 2019-2020-ஆம் நிதியாண்டில் மொத்தம் ரூ.69 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 1.9. நற்பெயர் பெற்ற பள்ளிகளில் 6–ஆம் வகுப்பில் மாணாக்கரை சேர்க்கும் திட்டம்

ஆதிதிராவிடர் நல, அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகள், அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகள், மாநகராட்சி மற்றும் நகராட்சிப் பள்ளிகளில் 5–ஆம் வகுப்பில் தேர்ச்சி பெறும் ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் மாணாக்கருக்கு அனைவருக்கும் கல்வித் திட்ட அலுவலரின்

உதவியுடன் தனித்தேர்வு ஒன்றினை நடத்தி அதில் அதிக மதிப்பெண்கள் பெறும் மாணாக்கருள், வட்டாரத்திற்கு (Block) ஒருவர் வீதம் 385 வட்டாரங்களில் இருந்து 385 மாணாக்கரை தேர்வு செய்து, அந்தந்த மாவட்ட ஆட்சித்தலைவரின் பரிந்துரை பெற்று, சிறந்த உண்டி உறைவிடப் பள்ளிகளில் 6ஆம் வகுப்பில் சேர்த்து, அவர்கள் தொடர்ந்து 12-ஆம் வகுப்பு வரை கல்வி பயில ஆகும் செலவினம் முழுவதும் அரசால் ஏற்கப்படுகிறது.

இத்திட்டத்திற்கென 2019-2020-ஆம் நிதியாண்டில் ரூ.13 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 1.10. நற்பெயர் பெற்ற பள்ளிகளில் 11–ஆம் வகுப்பில் மாணாக்கரை சேர்க்கும் திட்டம்

ஒவ்வொரு மாவட்டத்திலும் அரசு, அரசு நிதியுதவி பெறும், மாநகராட்சி, நகராட்சி, ஆதி திராவிடர் நல மற்றும் அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் கல்வி பயின்று 10–ஆம் வகுப்பில் சிறந்த மதிப்பெண் பெற்று தேர்ச்சி பெறும் ஆதிதிராவிடர் / பழங்குடியின மாணாக்கர், அவர்தம் பெற்றோர் அல்லது பாதுகாவலரின் வருட வருமானம் ரூ.2.50 இலட்சத்திற்கு மிகாமல் இருப்பின், இத்திட்டத்தின் கீழ்



தெரிவு செய்யப்பட்டு சிறந்த தனியார் பள்ளிகளில் 11-ஆம் வகுப்பில் சேர்க்கப்படுகின்றனர். அரசு ஆண்டு தோறும் ஒரு மாணாக்கருக்கு ரூ.28000/- வீதம் செலவிடுகிறது. 10-ஆம் வகுப்பு பொதுத் தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டவுடன் மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள், இணையதளத்தின் வாயிலாக அல்லது முதன்மைக் கல்வி அலுவலரிடமிருந்து ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சார்ந்த சிறந்த மதிப்பெண் பெற்ற 10 மாணாக்கரின் பெயர்ப் பட்டியலைப் பெற்று, அதே மாவட்டம் அல்லது அருகில் உள்ள மாவட்டங்களில் உள்ள சிறந்த தனியார் பள்ளிகளில் அவர்களைச் சேர்த்து, அவர்களுக்கான கல்விக் கட்டணம் அந்தக் கல்வி நிலையங்களுக்கு விடுவிக்கப்படுகின்றது.

இத்திட்டத்தின் வாயிலாக ஆண்டுதோறும், தமிழ்நாடு முழுவதும் 320 மாணாக்கர் பயன் பெறுகின்றனர்.

இத்திட்டத்திற்கென 2019-2020-ஆம் நிதியாண்டில் ரூ.2 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 1.11. விடுதிகள்

கிராமப்புறங்களில் உள்ள ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் கிறித்துவ மதம் மாறிய ஆதி திராவிட மாணாக்கரின் கல்வித் திறனை ஊக்குவித்து முன்னேற்றவும், இடைநிற்றலை தவிர்க்கவும், அவர்கள் படிக்கும் கல்வி நிறுவனங்களுக்கு அருகாமையில் தங்கி, சிறப்புடன் கல்வி பெற இத்துறையால் **1324** விடுதிகள் நடத்தப்படுகின்றன.

இத்துறையின் கீழ் இயங்கி வரும் விடுதிகளும் அவற்றில் ஒப்பளிக்கப்பட்டுள்ள மாணாக்கரின் எண்ணிக்கையும் பின்வருமாறு:—

**ஆதிதிராவிடர் நல விடுதிகளின் விவரம்**

| வ. எண் | விடுதிகளின் விவரம் | மொத்த விடுதிகள் | மாணாக்கர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | பள்ளி விடுதிகள் | 1143 | 82766 |
| 2 | கல்லூரி விடுதிகள் | 143 | 13050 |
| 3 | ஐ.டி.ஐ. விடுதிகள் | 17 | 1372 |
| 4 | பாலிடெக்னிக் விடுதிகள் | 5 | 288 |
| 5 | முதுகலை பட்டதாரி கல்லூரி விடுதிகள் | 15 | 1008 |
| 6 | சட்டக்கல்லூரி விடுதி | 1 | 55 |
| | மொத்தம் | 1324 | 98539 |



- கேரள எல்லையோரப் பகுதிகளில் உள்ள தமிழர்களின் குழந்தைகள் தங்கி கல்வி பயில ஏதுவாக தேனி மாவட்டத்தில் உள்ள **16** விடுதிகளில் தலா **10** இடங்கள் **(160** மொத்த இடங்கள்) கூடுதலாக ஏற்படுத்தப்பட்டுள்ளன.
- ஒவ்வொரு விடுதியிலும் இலங்கைத் தமிழ் அகதிகளின் குழந்தைகள் தங்கி கல்வி பயில ஏதுவாக 5 கூடுதல் இடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

### அ. விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணாக்கருக்குச் செய்து தரப்பட்டுள்ள வசதிகள்:—

i. கல்லூரி விடுதிகளுக்கு இரண்டு அடுக்கு படுக்கை வசதி கொண்ட கட்டில்கள் வழங்கப்பட்டுள்ளன.

ii. 582 மாணவியர் விடுதிகளுக்கு சுகாதாரக் குட்டை தகளிகள் (Napkin burners) வழங்கப்பட்டுள்ளன.

iii. அனைத்து விடுதிகளுக்கும் குடிநீர் சுத்திகரிப்பு கருவிகள், மாவு அரைக்கும் இயந்திரங்கள், வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் மற்றும் மின்னனு எடை இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

iv. 76 ஆதிதிராவிடர் நல மாணவியர் விடுதிகளுக்கு சலவை இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

v. சுகாதாரமான முறையில் உணவு சமைத்திட 380 ஆதி திராவிடர் நல விடுதிகள் மற்றும் 160 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளுக்கு நீராவி கொதிகலன்கள் வழங்கப்பட்டுள்ளன.

vi. அனைத்து விடுதிகளுக்கும் மருந்துகள் அடங்கிய முதலுதவிப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

vii. அனைத்து விடுதிகளிலும் நூலக வசதி செய்து தரப்பட்டுள்ளது.

viii. சமையல் எரிவாயு இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

ix. அனைத்து விடுதிகளுக்கும் செய்தித்தாள்கள் வழங்கப்படுகின்றன.

x. மாணாக்கருக்கு பாய், போர்வை மற்றும் உறையுடன் கூடிய தலையணைகள் வழங்கப்படுகின்றன.

xi. மாணாக்கர்களுக்கு எவர்சில்வர் தட்டு மற்றும் டம்ளர் வழங்கப்பட்டுள்ளது.

xii. கல்லூரி விடுதி மாணவர்கள் பயன்பெறும் வகையில் "இந்தியா ஆண்டுப் புத்தக"மும், "திட்டம்" மாத இதழும் வழங்கப்படுகின்றன.



## ஆ. உணவுக் கட்டணம்.

ஆதி திராவிடர் நல விடுதிகள், பழங்குடியினர் நல விடுதிகள் மற்றும் பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் தங்கிப்பயிலும் மாணாக்கருக்கு உணவுக் கட்டணமும், சில்லரைச் செலவினமும் கீழ்க்கண்ட வீதத்தில் வழங்கப்பட்டு வருகின்றன:-

| கட்டணங்கள் | பள்ளி மாணாக்கர் | கல்லூரி மாணாக்கர் |
|---|---|---|
| உணவுக் கட்டணம் (ஒரு மாதத்திற்கு) | ரூ.900/– | ரூ.1000/– |
| சில்லரைச் செலவினம் (சோப்பு, எண்ணெய் வாங்குதல் மற்றும் முடி வெட்டுதல்) (ஒரு மாதத்திற்கு) | ரூ.50/– | ரூ.75/– |
| சிறப்பு உணவுக் கட்டணம் (பொங்கல், குடியரசு தினம், தமிழ் வருடப் பிறப்பு, சுதந்திர தினம் மற்றும் தீபாவளி விழா நாட்களில்) | ரூ.20/– | ரூ.40/– |

## பள்ளி விடுதி – வாராந்திர உணவுப் பட்டியல்

| கிழமை | காலை சிற்றுண்டி | நண்பகல் உணவு | மாலை | இரவு உணவு |
|---|---|---|---|---|
| திங்கள் | ரவை கிச்சடி, சட்னி | சாதம், காய்கறி குருமா, கூட்டு, மோர் | சுண்டல், சுக்குமல்லி காபி / தேநீர் | சாதம், காரக்குழம்பு, இஞ்சி ரசம், பொரியல், முட்டை(1) |
| செவ்வாய் | பொங்கல், சட்னி | சாதம், சாம்பார், பொரியல், மோர் | சுண்டல், சுக்குமல்லி காபி / தேநீர் | சாதம், சாம்பார், கூட்டு, முட்டை(1) |
| புதன் | எலுமிச்சை சாதம், துவையல் | சாதம், மட்டன் (80 கிராம்)/சிக்கன் (100 கிராம்) குருமா, கூட்டு, மோர் | சுண்டல், சுக்குமல்லி காபி / தேநீர் | சாதம், காரக்குழம்பு, ரசம் |
| வியாழன் | ரவை கிச்சடி, சட்னி | சாதம், சாம்பார், பொரியல், மோர் | சுண்டல், சுக்குமல்லி காபி / தேநீர் | சாதம், காரக்குழம்பு, பொரியல், ரசம், முட்டை (1) |
| வெள்ளி | பொங்கல், சட்னி | சாதம், மோர்க்குழம்பு, பொரியல், மோர் | சுண்டல், சுக்குமல்லி காபி / தேநீர் | சாதம், காரக்குழம்பு, பொரியல், ரசம், முட்டை (1) |
| சனி | இட்லி, சட்னி | சாதம், சாம்பார், கூட்டு, மோர் | சுண்டல், சுக்குமல்லி காபி/ தேநீர் | சாதம், சாம்பார், கூட்டு, முட்டை (1) |
| ஞாயிறு | இட்லி, சாம்பார் | சாதம், சாம்பார், மோர் | சுண்டல், சுக்குமல்லி காபி/ தேநீர் | சாதம், தக்காளி சூப், பொரியல், ரசம் |



## கல்லூரி விடுதி – வாராந்திர உணவுப் பட்டியல்

| கிழமை | காலை சிற்றுண்டி | நண்பகல் உணவு | மாலை | இரவு உணவு |
|---|---|---|---|---|
| திங்கள் | பொங்கல், சட்னி | சாதம், சாம்பார், பொரியல், மோர் | சுண்டல், சுக்குமல்லி காபி/ தேநீர் | சாதம், காரக்குழம்பு, பொரியல், ரசம், முட்டை(1) |
| செவ்வாய் | இட்லி, சாம்பார் | சாதம், காய்கறி குருமா, கூட்டு, மோர் | சுண்டல், சுக்குமல்லி காபி/ தேநீர் | சாதம், சாம்பார், முட்டை(1), பொரியல், ரசம் |
| புதன் | ரவை கிச்சடி, சட்னி | சாதம், மட்டன் (80 கிராம்) /சிக்கன் (120 கிராம்) குருமா, பொரியல், மோர் | சுண்டல், சுக்குமல்லி காபி/ தேநீர் | சாதம், தக்காளி சூப், பொரியல், ரசம் |
| வியாழன் | எலுமிச்சை சாதம், துவையல் | சாதம், குழம்பு, கூட்டு, மோர் | சுண்டல், சுக்குமல்லி காபி/ தேநீர் | சாதம், காரக்குழம்பு, பொரியல், ரசம் முட்டை(1) |
| வெள்ளி | ரவை கிச்சடி, சட்னி | சாதம், சாம்பார், பொரியல், மோர் | சுண்டல், சுக்குமல்லி காபி/ தேநீர் | சாதம், சாம்பார், ரசம், பொரியல், மோர், முட்டை (1) |
| சனி | இட்லி, சாம்பார் | சாதம், சாம்பார், கூட்டு, மோர் | சுண்டல், சுக்குமல்லி காபி/ தேநீர் | சாதம், சாம்பார், ரசம், மோர், முட்டை (1) |
| ஞாயிறு | பொங்கல், சட்னி | சாதம், காய்கறி, குருமா, பொரியல், மோர் | சுண்டல், சுக்குமல்லி காபி/ தேநீர் | இட்லி, சாம்பார். |

## இ. தனியார் தொண்டு நிறுவனங்கள் நடத்தும் பள்ளி மற்றும் விடுதிகளுக்கு நிதியுதவி

### (i) விடுதிகள்:-

இத்துறை விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணாக்கருக்கு வழங்கப்படுவது போலவே, 29 தனியார் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் விடுதிகளில் தங்கிப்பயிலும் 4943 ஆதி திராவிடர் மாணாக்கருக்கு உணவுக் கட்டணம், பல்வகைச் செலவினம் மற்றும் இதர சலுகைகளும் இத்துறை மூலம் வழங்கப்படுகிறது.

### (ii) பள்ளியுடன் இணைந்த விடுதிகள்:

தூத்துக்குடி மாவட்டம், முத்துக்கருப்பன் நினைவு கல்வி அறக்கட்டளையால் நடத்தப்படும் பள்ளியில், 1-ஆம் வகுப்பு முதல் 12-ஆம் வகுப்பு வரை மொத்தம் 4132 மாணாக்கர் கடந்த **2018–2019–**ஆம் ஆண்டு கல்வி பயின்றனர். இந்த அறக்கட்டளைக்கு 2006-ஆம் ஆண்டு முதல் சம்பளம் மானியமாக வழங்கப்பட்டு வருகிறது. 127 ஆசிரியர் மற்றும் ஆசிரியர் அல்லாத பணிபுரிவோருக்கு ஊதியம் அரசால் மானியமாக வழங்கப்படுகிறது.



இத்திட்டத்திற்கென **2019 – 2020 –**ஆம் நிதியாண்டில் ரூ. **9.49** கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த அறக்கட்டளை நடத்தும் இரு விடுதிகளில் (மாணவர்–1, மாணவியர்–1) 3500 மாணாக்கர் தங்கி உள்ளனர். 2014-2015-ஆம் ஆண்டு முதல் காப்பாளர், சமையலர், காவலர் மற்றும் துப்புரவாளர் என 32 பணியாளர்களுக்கு ஊதியம் அரசால் மானியமாக வழங்கப்பட்டு வருகிறது.

## 2. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு இலவச வீட்டு மனைப் பட்டா வழங்குதல்

இத்திட்டத்தின் கீழ் வீடற்ற ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு இலவச வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்படுகின்றன. இதற்கான நிலம் தனியார் பேச்சுவார்த்தை மூலம் வாங்கப்பட்டு அல்லது நில எடுப்பு சட்டத்தின்படி கையகப்படுத்தப்பட்டு தகுதியுள்ள பயனாளிகளுக்கு பட்டாக்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

| | வழங்கப்படும் அளவு | பயனாளியின் வருட வருமான வரம்பு |
|---|---|---|
| கிராமப்புறங்களில் | 3 சென்ட் இடம் | ரூ.72,000/– |
| நகராட்சியில் | 1 ½ சென்ட் இடம் | |
| மாநகராட்சியில் | 1 சென்ட் இடம் | |

இத்திட்டத்திற்கென 2019-2020-ஆம் நிதியாண்டில் மொத்தம் ரூ.6 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 3. மயானங்கள் மற்றும் மயானப் பாதை வசதி

ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு மயான வசதி மற்றும் மயானப் பாதைகள் அமைத்துக் கொடுக்க அரசு நிதி ஒதுக்கீடு செய்து வருவதுடன், நிலத்தை வாங்குவதற்கும், கையகப்படுத்துவதற்கும் நிதி ஒதுக்கீடு செய்கிறது.

உள்ளாட்சி அமைப்புகளும் தங்களுடைய சொந்த நிதியிலிருந்து ஆதி திராவிடர் மயானங்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளைச் செய்து தருகின்றன. இந்நோக்கில் குடிநீர் வசதிக்கான செலவினத்தில் 15



விழுக்காடும், இணைப்புச்சாலை வசதிக்கான செலவினத்தில் 10 விழுக்காடும் இத்துறையால் ஏற்கப்படுகின்றன.

இத்திட்டத்திற்கென 2019-2020-ஆம் நிதியாண்டில் ரூ.75.84 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 4. ஈமச்சடங்கு உதவித்தொகை

ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் கிருத்துவ மதத்திற்கு மாறிய ஆதி திராவிடர் இனத்தைச் சார்ந்தவர்களின் குடும்பத்தில் ஏதேனும் இறப்பு ஏற்பட்டால் ஈமச் சடங்கிற்கான செலவினை மேற்கொள்ள நிதி உதவியாக ரூ.2,500/- வழங்கப்படுகிறது.

இத்திட்டத்திற்கென 2019-2020-ஆம் நிதியாண்டில் ரூ.**4.97** கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 5. ஆதி திராவிடர் துணைத் திட்டம் (SCSP)

ஆதி திராவிடர் மக்களை சமூக, பொருளாதார மற்றும் கல்வியில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியினை எய்திடச் செய்யும் பொருட்டு ஆதி திராவிடர் துணைத் திட்டம் தமிழ்நாட்டில் 1980-1981-ஆம் நிதியாண்டிலிருந்து

செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாநிலத்தின் மொத்தத் திட்ட நிதியிலிருந்து தமிழ்நாட்டின் ஆதி திராவிடர் மக்கள் தொகைக்கு (20.01%) இணையாக நிதி ஒதுக்கீடு செய்து செயல்படுத்துவதே இத்திட்டத்தின் அடிப்படை நோக்கமாகும்.

மாநில அளவில் இத்துணைத் திட்டத்தின் கீழ் திட்டங்களை தீட்டுவதற்கும், செயல்படுத்துவதற்கும் இத்துறை ஒருங்கிணைப்புத் துறையாக (Nodal Department) விளங்குகிறது. இத்துறையின் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் ஒருங்கிணைப்பு அலுவலராக (Nodal Officer) அங்கீகரிக்கப்பட்டுள்ளார். மேலும், மாவட்ட அளவில் இத்திட்டங்களைக் கண்காணிக்கவும், ஆய்வு செய்யவும் ஆதி திராவிடர் நல இயக்குநர் கண்காணிப்பு அலுவலராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஆதிதிராவிடர்களுக்கான திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்துவதற்காக, செயலாக்கத் துறைகளால் நியமிக்கப்பட்ட ஒருங்கிணைப்பு அலுவலர்கள் இத்துறையுடன் இணைந்து செயலாற்றி வருகின்றனர். 45 துறைத் தலைமைகளை உள்ளடக்கிய **19** செயலாக்கத் துறைகள் வாயிலாக ஆதி திராவிடர் மக்களின் மேம்பாடு மற்றும்



நலனுக்காக இத்துணைத் திட்டத்தின் கீழ் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

2019-2020-ஆம் ஆண்டு மாநில திட்ட ஒதுக்கீடான (மாநில நலத்திட்ட செலவினம் – Welfare Expenditure of State) ரூ.56,849.96 கோடியில், ஆதி திராவிடர் துணைத் திட்டத்தின் (ஆதிதிராவிடர் நலத்திட்ட செலவினம் – Expenditure on Scheduled Castes welfare) கீழ் ரூ.12,103.72 கோடி (21.29 விழுக்காடு) மாநில அரசால் ஒதுக்கப்பட்டுள்ளது. இது மாநிலத்தில் உள்ள ஆதி திராவிடர் இன மக்கள் தொகை விழுக்காட்டை (20.01%) விட அதிகமானதாகும்.

## 6. ஆதி திராவிடர் துணைத் திட்டத்திற்கான மைய அரசின் சிறப்பு நிதியுதவித் திட்டம் (SCA to SCSP)

அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்காகவும், குடும்ப வருவாய் ஈட்டக்கூடிய திட்டங்களில் உதவுவதற்காகவும், பொருளாதாரம் மற்றும் திறன் மேம்பாடு அடையச் செய்யவும், உற்பத்தித் திறன் மற்றும் வருமானத்தை

அதிகரிக்கும் நோக்கிலும், மாநில அரசின் ஆதி திராவிடர் துணைத்திட்டத்திற்கு கூடுதலாக வலுசேர்க்கும் வகையில் மைய அரசு கூடுதலாக நிதியுதவி வழங்குகிறது. இந்த நிதியில் 80 விழுக்காடு, ஆதி திராவிடர் மக்களின் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களுக்காகவும், 10 விழுக்காடு வேலையில்லா ஆதி திராவிடர் இளைஞர்களுக்கு தாட்கோ மூலம் திறன் மேம்பாட்டுப் பயிற்சியளிக்கவும் பயன்படுத்தப்படுகிறது. மீதமுள்ள 10 விழுக்காடு நிதி, ஆதி திராவிடர்கள் 50 விழுக்காடு மற்றும் அதற்கு மேல் வசிக்கும் குடியிருப்புகளில் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கிடும் பொருட்டு ஆதி திராவிடர் நல இயக்குநருக்கு விடுவிக்கப்படுகிறது.

இத்திட்டத்திற்கென, 2019-2020-ஆம் நிதியாண்டில் ரூ.135 கோடி நிதி மைய அரசிடமிருந்து கிடைக்கப்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.



## 7. சாதிச் சான்றிதழ்கள்

### (i) சாதிச்சான்று வழங்குதல்

ஆதி திராவிடர்களுக்கான சாதிச் சான்றிதழ்கள் வழங்கும் அதிகாரம் வட்டாட்சியருக்கு வழங்கப்பட்டுள்ளது. வட்டாட்சியரால் ஆதி திராவிடர்களுக்கு சாதிச்சான்று வழங்க மறுக்கும் பட்சத்தில் வருவாய் கோட்டாட்சியர் அல்லது சார் ஆட்சியரிடம் மேல்முறையீடு செய்வதுடன், அதன்பிறகு குறைகள் நிவர்த்தி செய்ய மாவட்ட ஆட்சியரை அணுகலாம்.

### (ii) சாதிச்சான்றுகளின் மெய்த்தன்மையை சரிபார்த்தல்

ஆதிதிராவிடர்களுக்கு வழங்கப்பட்ட சாதிச் சான்றிதழ்களின் மெய்த்தன்மையினை அறிய மாவட்ட அளவிலான விழிப்புணர்வுக் குழு கீழ்க்கண்டவாறு அமைக்கப்பட்டுள்ளது:-

**மாவட்ட அளவிலான விழிப்புணர்வுக் குழு**

<table>
<tr><td>1</td><td>மாவட்ட ஆட்சியர்</td><td>தலைவர்</td><td rowspan="3">ஆதி திராவிடர் என வழங்கப்பட்ட சாதிச் சான்றிதழ்களின் மெய்த்தன்மையினைக் கூர்ந்தாய்வு செய்து இறுதி ஆணை பிறப்பிக்கலாம். இந்த ஆணையினை ஏற்கவில்லையெனில் இந்திய அரசியலமைப்புச் சட்டக்கூறு 226–இன்படி உயர் நீதி மன்றத்திலும், சட்டக்கூறு 136–இன்படி உச்ச நீதிமன்றத்திலும் மேல்முறையீடு செய்யலாம்.</td></tr>
<tr><td>2</td><td>மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்</td><td>உறுப்பினர் செயலர்</td></tr>
<tr><td>3</td><td>மானுடவியல் வல்லுநர்</td><td>உறுப்பினர்</td></tr>
</table>

## 8. 1955 ஆம் ஆண்டு குடிமையியல் பாதுகாப்புச் சட்டம், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமை தடுப்பு) சட்டம், 1989 மற்றும் திருத்தச் சட்டம், 2015

### (அ) தீண்டாமை ஒழிப்பு

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு எதிராக நிகழும் தீண்டாமை மற்றும் வன்கொடுமைகளைத் தடுக்க அரசு சீரிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.



இதற்காக, 1955-ஆம் ஆண்டு குடிமையியல் பாதுகாப்புச் சட்டம், 1989–ஆம் ஆண்டு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமை தடுப்பு) சட்டம் மற்றும் திருத்தச் சட்டம், 2015, வன்கொடுமைகள் தடுப்பு விதிகள், 1995 மற்றும் திருத்த விதிகள், 2016 போன்றவை மைய அரசால் இயற்றப்பட்டு, மாநில அரசால் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மேற்கண்ட திருத்தச் சட்டம், 2015 மற்றும் திருத்த விதிகள், 2016 ஆகியவை முறையே 01.01.2016 மற்றும் 14.04.2016 ஆகிய தேதிகளில் அமலுக்கு வந்துள்ளன.

மேற்படி சட்டங்கள் மற்றும் விதிகளை அமல்படுத்துவதற்கென கூடுதல் காவல்துறைத் தலைவர் தலைமையின் கீழ், சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவு ஒன்று சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வருகிறது.

இந்த இரு சட்டங்களின் கீழ் (i) வழக்குகள் பதிவு செய்தல், புலன் விசாரணை, வழக்குத் தொடுத்தல் ஆகியவற்றை மேற்பார்வை செய்வதும், (ii) ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு பாதுகாப்பு அரணாக

விளங்குவதுமே சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவின் பணிகளாகும்.

### (ஆ) தனியுறு சிறப்பு நீதிமன்றங்கள்

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமை தடுப்பு) சட்டம் மற்றும் குடிமையியல் பாதுகாப்புச் சட்டம் ஆகியவற்றின் கீழ் பதிவு செய்யப்படும் வழக்குகளை விரைந்து முடிக்க தனியுறு சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இச்சட்டங்களின் கீழ் பதிவு செய்யப்படும் வழக்குகளை விசாரிக்க தஞ்சாவூர், திருச்சி, மதுரை, திருநெல்வேலி, விழுப்புரம் மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் 6 தனியுறு சிறப்பு நீதிமன்றங்களை அரசு அமைத்துள்ளது. மேலும், அரசாணை (நிலை) எண். 334, உள்(நீதிமன்றங்கள்–II) துறை, நாள்.06.04.2017–இல் **16** தனியுறு சிறப்பு நீதிமன்றங்களை திண்டுக்கல், இராமநாதபுரம், விருதுநகர், புதுக்கோட்டை, காஞ்சிபுரம், பெரம்பலூர், தேனி, திருப்பூர், திருவண்ணாமலை, வேலூர், திருவாரூர், தூத்துக்குடி, கன்னியாகுமரி, கோயம்புத்தூர், கடலூர் மற்றும் நாமக்கல் ஆகிய 16 மாவட்டங்களில் 2016–2017 முதல் 2019–2020 வரையில் 4 கட்டங்களில் உருவாக்குவதற்கு நிர்வாக ஒப்புதல் வழங்கி



ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. முதற்கட்டமாக திண்டுக்கல், இராமநாதபுரம், விருதுநகர் மற்றும் புதுக்கோட்டை ஆகிய 4 மாவட்டங்களில் 4 தனியுறு சிறப்பு நீதிமன்றங்கள் உருவாக்க ரூ.3.22 கோடி ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. மேலும், அரசாணை (நிலை) எண்.**1704**, உள் (நீதிமன்றங்கள் II) துறை, நாள்.**03.10.2018–**இல் கடலூர், நாமக்கல், தேனி மற்றும் திருவண்ணாமலை ஆகிய நான்கு மாவட்டங்களில் தனியுறு சிறப்பு நீதிமன்றங்கள் அமைப்பதற்கு நிதி ஒப்பளிப்பு வழங்கி ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. இதர மாவட்டங்களில் தற்போதுள்ள குற்றவியல் அமர்வு நீதிமன்றங்களுக்கு இவ்வழக்குகளை விசாரணை செய்ய அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. மேலும், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமை தடுப்பு) சட்டம், **1989** தமிழகத்தில் உள்ள அனைத்து காவல் நிலையங்களிலும் அமல்படுத்தப்படுவதை மாநில அளவில் ஒரு கூடுதல் காவல் துறை இயக்குநர், காவல் துறை உதவித் தலைவர் மற்றும் மாவட்ட அளவில் **31** காவல் துணை கண்காணிப்பாளர்கள் மற்றும் 7 காவல் உதவி ஆணையர்கள் மேற்பார்வையில் மாவட்ட சமூகநீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவுகள் கண்காணித்து வருகின்றன.

1995-ஆம் ஆண்டைய ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமை தடுப்பு விதிகளில் விதி எண்.17(1)-இன்படி, ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் 5 அலுவல் சார்ந்த மற்றும் அலுவல் சாரா உறுப்பினர்களைக் கொண்ட மாவட்ட அளவிலான விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக் குழுவை அரசு அமைத்துள்ளது. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் பிரச்சனைகளை அறிந்த மற்றும் நல்ல நோக்கம் கொண்டவர்களை உறுப்பினராக நியமனம் செய்வதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. மாவட்ட அளவிலான குழு மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கூடி இச்சட்டவிதிகளை நடைமுறைப்படுத்துவது பற்றியும், பாதிக்கப்பட்டவர்களுக்குத் தீருதவி மற்றும் மறுவாழ்வு அளித்தது குறித்தும், இச்சட்டங்களின் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் நிலை பற்றியும் மாவட்ட அளவில் ஆய்வு செய்யும். மேலும், இச்சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதை கண்காணிக்கவும், ஆய்வு செய்யவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் மாநில அளவில் ஒரு



விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கென 2019-2020-ஆம் நிதியாண்டில் ரூ.11.87 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## (இ) தீண்டாமை ஒழிப்புப் பிரச்சாரம்

தீண்டாமைக்கெதிராக பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் மனிதநேய வாரவிழா அனைத்து மாவட்டங்களிலும் ஆண்டுதோறும் ஜனவரி **24** முதல் **30–**ஆம் நாள் வரை நடத்தப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் மனிதநேய வார விழா நடத்துவதற்காக மாவட்டங்களுக்கு தலா ரூ.50,000/- மற்றும் மாநில அளவில் ரூ.1,00,000/- நிதி வழங்கப்படுகிறது.

வில்லுப்பாட்டுக் கலைஞர்கள் மூலம் தீண்டாமைக் கொடுமைகள் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது.

இது தவிர, ஆண்டுதோறும் ஜனவரி 26, ஆகஸ்டு 15 மற்றும் அக்டோபர் 2 ஆகிய நாட்களிலும், அந்தந்த

மாவட்டங்களில் முக்கியத்துவம் வாய்ந்த உள்ளூர் விடுமுறை நாட்களிலும் சமபந்தி விருந்து ஏற்பாடு செய்யப்படுகிறது. சமபந்தி விருந்து ஏற்பாடு செய்வதில் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் ஈடுபடுத்தப்படுகின்றன.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமை தடுப்பு) சட்டம், 1989 மற்றும் திருத்தச் சட்டங்களில் உள்ள விதிகளைப் பற்றி தெளிவுபடுத்துவதற்காக வருவாய் துறை அலுவலர்கள் மற்றும் இதர அலுவலர்களுக்கு அண்ணா மேலாண்மை நிலையம் வழியாக சிறப்பு பயிற்சி வழங்கப்பட்டது. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு அவர்தம் உரிமைகள் மற்றும் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பு குறித்து அறியச் செய்வதற்காக வன்கொடுமை தடுப்புச் சட்டம் விதி 10–இன்படி தனி அலுவலர்களாகிய மாவட்ட ஆட்சியர்கள் பயிற்சிப் பட்டறைகள் மற்றும் விழிப்புணர்வு மையங்களை நடத்துகின்றனர்.

இத்திட்டத்திற்கென 2019-2020-ஆம் நிதியாண்டில் ரூ.82.75 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



### (இ) சமூக நல்லிணக்கத்துடன் திகழும் சிறந்த கிராமங்களைத் தேர்ந்தெடுத்தல்

இத்திட்டத்தின் கீழ், சென்னை தவிர்த்து அனைத்து மாவட்டங்களிலும் தீண்டாமையை விட்டொழித்து பொது மக்கள் நல்லிணக்கத்துடன் வாழும் ஒரு கிராமம் தேர்ந்தெடுக்கப்பட்டு, அக்கிராமத்திற்கு அடிப்படை வசதிகளை வழங்கிட ரூ.10 இலட்சம் நிதி வழங்கப்படுகிறது.

இத்திட்டத்திற்கென 2019-2020-ஆம் நிதியாண்டில், ரூ.3.10 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 9. தமிழ் நாடு ஆதி திராவிடர் கலை மற்றும் இலக்கிய மேம்பாட்டுச் சங்கம்

கலை, கலாச்சாரம், இலக்கியம் போன்ற துறைகளில் சிறந்த படைப்புகளை உருவாக்கும் ஆதி திராவிடர் இன கலைஞர்களை ஊக்குவிக்கவும், அவர்களின் ஆராய்ச்சிப் பணிகளுக்கு உதவிடவும், அரசு நிதியுதவி வழங்குகிறது. இதற்காக ரூ.50 இலட்சம் மூலதன நிதி ( Corpus Fund) உருவாக்கப்பட்டு வைப்புத் தொகை கணக்கில் வைக்கப்பட்டுள்ளது. அத்தொகைக்காகப் பெறப்படும் வட்டித்தொகை தெரிவு செய்யப்படும் சிறந்த

எழுத்தாளர்களுக்கு பரிசுத் தொகை வழங்க பயன்படுத்தப்படுகிறது. ஒவ்வோர் ஆண்டும் சிறந்த இலக்கியப் படைப்புகளுக்காகத் தேர்வு செய்யப்பட்ட 10 ஆதி திராவிடர் எழுத்தாளர்கள் மற்றும் இதர இனங்களைச் சேர்ந்த ஓர் எழுத்தாளர் என 11 எழுத்தாளர்களின் நூல்களை வெளியிட தலா ரூ.40,000/- பரிசுத்தொகை வழங்கப்படுகிறது.



# II. பழங்குடியினர் நலன்

## முன்னுரை

பெரும்பான்மையான பழங்குடியினர் வனப்பகுதிகளிலும் பிற தனிமைப்படுத்தப்பட்ட இடங்களிலும் வசித்து வருகின்றனர். அவர்களது சமூக பொருளாதார மற்றும் கல்வி அளவுறுகள் மாநில சராசரியை விட குறைவாக உள்ளன. பழங்குடியினருக்கும் சமூகத்தின் இதர பிரிவினருக்கும் இடையே உள்ள சமூக பொருளாதார இடைவெளியினைக் குறைத்து அவர்களையும் சமூக நீரோட்டத்தில் இணையச் செய்வது இவ்வரசின் கடமையாகும். எனவே, பழங்குடியினர் நலனுக்கென தனியாக ஒரு இயக்குநரகம் 2000 ஆண்டு ஏப்ரல் மாதம் தோற்றுவிக்கப்பட்டது. அரசாணை (நிலை) எண்.56, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந–1)துறை, நாள்.28.08.2017–இல் ஆணையிடப்பட்டவாறு, பழங்குடியினர் நல இயக்குநரகம் பழங்குடியினர் நலப் பொருண்மைகள் குறித்த நிர்வாக மற்றும் நிதி அதிகாரங்களுடன் முழு அதிகாரத்தோடு கூடிய தனி பொறுப்புடன் 01.04.2018 முதல் செயல்பட்டு வருகிறது. இத்துறையானது பல புதுமையான திட்டங்களை செயல்படுத்தி தமிழ்நாட்டில் உள்ள

பழங்குடியினரின் சமூக, பொருளாதார மற்றும் கல்வித் தரத்தினை உயர்த்தி வருகிறது. தமிழகத்தில் பழங்குடியினர் அதிகமாக வசித்து வரும் சேலம், திருவண்ணாமலை, விழுப்புரம், வேலூர், தர்மபுரி, நாமக்கல், திருவள்ளூர், காஞ்சிபுரம், நீலகிரி, கோயம்புத்தூர், கிருஷ்ணகிரி, ஈரோடு, திருச்சிராப்பள்ளி, கடலூர், மதுரை, அரியலூர், திருநெல்வேலி மற்றும் சென்னை ஆகிய 18 மாவட்டங்களில் பழங்குடியினரின் முன்னேற்றத்திற்காக அரசு மிகுந்த முனைப்புடன் சிறப்பு கவனம் செலுத்தி வருகிறது.

குறைந்த கல்வி அறிவு, ஊட்டச்சத்து குறைபாடுகள், குறைவான அடிப்படை வசதிகளுடன் வாழும் நிலை, வன வளங்கள் அழிக்கப்படுவதால் மக்கள் இடம் பெயர்தல் பொருளாதார வாய்ப்புகள் இல்லாமை போன்ற பழங்குடியின மக்கள் சந்தித்து வரும் இன்னல்களை களைவதே அரசின் பணியாகும்.

பழங்குடியின மக்களை கல்வி, சுகாதாரம், சுற்றுப்புறத் தூய்மை ஆகியவற்றில் முழுமையான மேம்பாடு அடையச் செய்வதும், பழங்குடியினர் குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதி, இணைப்புச்சாலைகள் மற்றும் வீடுகள் கட்டித்தருதல் போன்ற அடிப்படை வசதிகளை மேம்படுத்தி அனைத்திலும் வளர்ச்சி அடையச் செய்வதும் அரசின் முதன்மையான



குறிக்கோளாகும். பழங்குடியினரின் சமூக பொருளாதார நிலையினை உயர்த்துவதன் மூலம் பழங்குடியின மக்களுக்கும் பொதுமக்களுக்குமிடையே உள்ள இடைவெளியைக் குறைப்பதற்கு அரசு முக்கியத்துவம் அளித்து வருகிறது.

## 1. கல்வி

### (அ) பள்ளிகள்

பழங்குடியின மக்களின் கல்வி அறிவினை தரமான கல்வியால் முன்னேற்றம் அடையச் செய்ய வேண்டும் என்ற உயரிய நோக்கில் அவர்தம் குடியிருப்புகளுக்கு அருகில் விடுதியுடன் இணைந்த உண்டி உறைவிடப் பள்ளிகள் அரசால் தோற்றுவிக்கப்பட்டு நடத்தப்பட்டு வருகின்றன.

**பழங்குடியினர் நலத்துறையின் கீழ் இயங்கும் உண்டி உறைவிடப் பள்ளிகள் மற்றும் மாணாக்கர் எண்ணிக்கை விவரம்.**

| விவரம் | பள்ளிகள் எண்ணிக்கை | மாணாக்கர் எண்ணிக்கை |
|---|---|---|
| தொடக்கப் பள்ளி | 207 | 9,065 |
| நடுநிலைப் பள்ளி | 54 | 5,103 |
| உயர்நிலைப் பள்ளி | 29 | 3,795 |
| மேல்நிலைப் பள்ளி | 25* | 8,521* |
| மொத்தம் | 315 | 26,484 |

(* 1,553 மாணாக்கர் பயிலும் 7 ஏகலைவா மாதிரி உண்டி உறைவிடப் பள்ளிகளை உள்ளடக்கியது )

க

## (ஆ) விடுதிகள்

பழங்குடியின மாணாக்கர் பள்ளி மற்றும் கல்லூரிகளுக்கு அருகில் விடுதிகளில் தங்கிப் பயில்வதற்கு ஏதுவாக இத்துறையால் விடுதிகள் கட்டப்பட்டு நிர்வகிக்கப்படுகின்றன.

ஆதிதிராவிடர் நல விடுதி மாணாக்கருக்கு வழங்கப்படும் அனைத்து வசதிகளுடன் கூடுதலாக மலைப் பகுதியில் உள்ள இவ்விடுதி பழங்குடியின மாணாக்கருக்கு குளிர் மற்றும் மழையிலிருந்து பாதுகாக்க ஸ்வெட்டர் மற்றும் ரெயின்கோட் வழங்கப்பட்டுள்ளன.

**பழங்குடியினர் நலத்துறையின் கீழ் இயங்கும் விடுதிகள் மற்றும் மாணாக்கர் எண்ணிக்கை விவரம்.**

| வ. எண். | விடுதிகளின் வகைப்பாடு | விடுதிகளின் எண்ணிக்கை | மாணாக்கர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | பள்ளி விடுதிகள் | 40 | 1899 |
| 2 | தொழிற் பயிற்சி நிலைய விடுதி | 1 | 131 |
| 3 | கல்லூரி விடுதிகள் | 2 | 102 |
| | மொத்தம் | 43 | 2132 |



## (இ) தனியார் தொண்டு நிறுவனங்கள் நடத்தும் பள்ளி மற்றும் விடுதிகளுக்கு நிதியுதவி :

### (i) விடுதிகள்:

தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் 5 விடுதிகளில் தங்கி கல்வி பயிலும் 337 பழங்குடியின மாணாக்கர் பயன்பெறும் வகையில் உணவுக் கட்டணம் இத்துறையால் மானியமாக வழங்கப்படுகிறது. மேலும், அரசு விடுதி மாணாக்கருக்கு வழங்கப்படுவது போல தொண்டு நிறுவன விடுதிகளில் தங்கி பயிலும் மாணாக்கருக்கும் பல்வகைச் செலவினம் மற்றும் இதர சலுகைகளும் வழங்கப்படுகின்றன.

### (ii) விடுதிகள் இணைந்த பள்ளி

திருவண்ணாமலை மாவட்டம், ஜவ்வாது மலையில் கிராம வளர்ச்சி நிறுவனம் (Society for Rural Development) எனும் தொண்டு நிறுவனம் 1-ஆம் வகுப்பு முதல் 12-ஆம் வகுப்பு வரை பயிலும் 2560 பழங்குடியின மாணாக்கருக்காக பள்ளி மற்றும் விடுதிகளை நிறுவி நடத்தி வருகிறது. 2005-ஆம் ஆண்டு முதல் இப்பள்ளிக்கு சம்பள மானியம்

வழங்கப்பட்டு வருகிறது. 36 ஆசிரியர் மற்றும் 7 ஆசிரியர் அல்லாத பணியிடங்களுக்கு ஊதியம் வழங்கிட ஏதுவாக ரூ.3.78 கோடி அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும், இந்நிறுவன விடுதியில் தங்கி பயிலும் 550 பழங்குடியின மாணாக்கருக்கு உணவுக்கட்டணம், பல்வகைச் செலவினம் மற்றும் இதர சலுகைகளும் இவ்வரசால் வழங்கப்பட்டு வருகின்றன.

## 2. மைய அரசின் திட்டங்கள்

பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளில் மைய அரசின் நிதி உதவியுடன் பின்வரும் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன:-

### (அ) பழங்குடியினர் துணைத் திட்டத்திற்கான சிறப்பு மைய நிதியுதவி (SCA to TSP)

பழங்குடியினர் துணைத் திட்டத்திற்கான சிறப்பு நிதியுதவியினை மைய அரசு ஒவ்வொரு ஆண்டும் விடுவித்து வருகிறது. இத்திட்டத்தின் கீழ் பெறப்படும் நிதியில் 60 விழுக்காடு பழங்குடியினருக்கு இயந்திர கலப்பைகள் வழங்குதல், தேனீ வளர்ப்புப் பெட்டிகள் வழங்குதல், பெட்டிக்



கடைகள் வைத்தல் போன்ற வருவாய் ஈட்டும் திட்டங்களை மேற்கொள்வதற்காகவும், 30 விழுக்காடு நிதி பழங்குடியினர் பகுதிகளில் பள்ளிக் கட்டடங்கள் பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு, கழிவறைக் கூடங்கள் மற்றும் ஆழ்துளைக் கிணறுகள் அமைத்தல் ஆகிய உட்கட்டமைப்புப் பணிகளைச் செய்வதற்காகவும் செலவிடப்படுகிறது. எஞ்சிய 10 விழுக்காடு நிதி பழங்குடியின மக்களுக்கு வேலைவாய்ப்பினை உருவாக்குவதற்காக பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்திற்கென 2019-2020-ஆம் நிதியாண்டில் ரூ.6.51 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### (ஆ) இந்திய அரசியலமைப்புச் சட்டக்கூறு 275(1)

இந்திய அரசியலமைப்புச் சட்டக்கூறு 275(1)-இன் கீழ், மைய அரசால் வழங்கப்படும் நிதியுதவியிலிருந்து பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளில் நடை மேம்பாலம் கட்டுதல், இணைப்புச் சாலைகள் அமைத்தல், மின் இணைப்பு வழங்குதல், தடுப்பணைகள் கட்டுதல், சிக்கில் செல் அனீமியா என்ற நோயை கண்டறிதல் ஆகிய திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. பழங்குடியினர் மற்றும் பிற மரபு வழியாக வனங்களில் குடியிருப்போர் (வன உரிமைகள்

அங்கீகரித்தல்) சட்டம், 2006-ஐ செயல்படுத்துவதற்கும் இந்நிதி பயன்படுத்தப்படுகிறது.

ஏற்கனவே இயங்கிவரும் (1) விழுப்புரம் மாவட்டம் – வெள்ளிமலை, (2) சேலம் மாவட்டம்–அபிநவம், (3) திருவண்ணாமலை மாவட்டம் – அத்திப்பட்டு, (4) நீலகிரி மாவட்டம் – கோடப்பமந்து, (5) வேலூர் மாவட்டம் – அத்தனாவூர் (6) நாமக்கல் மாவட்டம் – செங்கரை மற்றும் (7) காஞ்சிபுரம் மாவட்டம் – பட்டிப்புலம் ஆகிய 7 ஏகலைவா மாதிரி உண்டி உறைவிடப்பள்ளிகளின் தொடர் செலவினத்திற்கும் பள்ளிகளைப் பராமரிப்பதற்கும் இந்நிதி பயன்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்திற்கென 2019-2020-ஆம் நிதியாண்டில் ரூ.17 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### (இ) அழிவின் விளிம்பிலுள்ள பண்டைய பழங்குடியினர் மேம்பாடு

தமிழ் நாட்டில் உள்ள **36** வகையான பழங்குடியினரில் **6** வகை பழங்குடியினர் அதாவது தோடா, கோட்டா, குரும்பாஸ், இருளர், பணியன் மற்றும் காட்டுநாயகன் ஆகியோர் அழிவின் விளிம்பிலுள்ள பழங்குடியினராகக் கண்டறியப்பட்டுள்ளனர்.



அழிவின் விளிம்பிலுள்ள பழங்குடியினரின் மேம்பாட்டிற்காக, மைய அரசு ஆண்டுதோறும் நிதியுதவி வழங்கி வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் அழிவின் விளிம்பிலுள்ள பழங்குடியின மக்களுக்கென பாரம்பரிய வீடுகள் கட்டுதல், கறவை மாடுகள் வழங்குதல், குடிநீர் வசதி ஏற்படுத்துதல், பாசன தடுப்பணை மற்றும் ஆழ்துளைக் கிணறு அமைத்தல், ஆரம்ப சுகாதார மையம், சாலை வசதி மற்றும் தெருவிளக்குகள் போன்ற அடிப்படை வசதி மேம்பாட்டுப் பணிகள் மற்றும் தேனீ வளர்ப்பு, மீன்பிடி வலை வழங்குதல், இருசக்கர வாகனம் வழங்குதல், செங்கல் சூளை அமைத்தல் போன்ற பொருளாதார மேம்பாட்டுப் பணிகளும், அழிவின் விளிம்பிலுள்ள பழங்குடியின மக்கள் குறித்த தளநிலை கணக்கெடுப்பும் (PVTGs Baseline Survey) மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், இத்திட்டத்தின் கீழ் சேலம் மாவட்டம், ஏற்காட்டில் புதிதாக ஒரு ஏகலைவா மாதிரி உண்டி உறைவிடப் பள்ளி துவங்கப்பட்டுள்ளது.

நீலகிரி மாவட்டத்தில் பழங்குடியின மக்கள் மற்றும் மாணாக்கர் மலை உச்சியிலிருந்து மலை அடிவாரத்திற்கு சென்றுவர இரண்டு சிற்றுந்துகள் (Pick up vehicles) வழங்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்திற்கென 2019-2020-ஆம் நிதியாண்டில் ரூ.40 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### (ஈ) பழங்குடியினர் மற்றும் பிற மரபு வழியாக வனங்களில் குடியிருப்போர் (வன உரிமைகள் அங்கீகரித்தல்) 2006 சட்டத்தைச் செயல்படுத்துதல்

பழங்குடியினர் மற்றும் பிற மரபு வழியாக வனங்களில் குடியிருப்போர் (வன உரிமைகள் அங்கீகரித்தல்) சட்டம், 2006, இந்திய அரசால் இயற்றப்பட்டு, 29.12.2006 முதல் நடைமுறைக்கு வந்தது. இச்சட்டத்தின்படி, 13.12.2005ஆம் நாளுக்கு முன்பே வனங்களில் குடியிருந்து வரும் பழங்குடியினரும், 13.12.2005-ஆம் தேதிக்கு முன்பு மூன்று தலைமுறைகளாக அதாவது 75 ஆண்டுகளாக பிற மரபு வழியாக வனங்களில் குடியிருப்போரும் இச்சட்டத்தின் கீழ் வன உரிமைகள் பெறுவதற்கு தகுதி உடையவர்களாகிறார்கள்.



இச்சட்டத்தினை நடைமுறைப்படுத்துதல் பின்வரும் குழுக்களால் கண்காணிக்கப்படுகிறது:–

i) அரசு தலைமைச் செயலாளரை தலைவராகக் கொண்ட மாநில அளவிலான கண்காணிப்புக் குழு

ii) மாவட்ட ஆட்சியரை தலைவராகக் கொண்ட மாவட்ட அளவிலான குழு

iii) வருவாய் கோட்ட அலுவலரை தலைவராகக் கொண்ட உட்கோட்ட அளவிலான குழு

பழங்குடியினர் மற்றும் பிற மரபு வழியாக வனங்களில் குடியிருப்போருக்கான வன உரிமைகளை பாதுகாக்கவும், அங்கீகரிக்கவும் 17 மாவட்டங்களில் பழங்குடியினர் மற்றும் பிற மரபு வழியாக வனங்களில் குடியிருப்போர் (வன உரிமைகள் அங்கீகரித்தல்) சட்டம், 2006 நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. வன உரிமைகள் சட்டம் 2006–இன்படி தனி நபர் உரிமைகள் மற்றும் சமூக உரிமைகள் ஆகியவற்றை வழங்க மாவட்ட ஆட்சித் தலைவர்களால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதுவரை 7146 தனி நபர் உரிமைகளும் 417 சமூக உரிமைகளும் இச்சட்டத்தின்படி பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

## 3. மாநிலத் திட்டங்கள்

### (அ) விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் (CTDP)

விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பழங்குடியினரின் மேம்பாட்டுக்கென ரூ.50 கோடி நிதியினை 2012–2013–ஆம் ஆண்டு முதல் அரசு ஒதுக்கீடு செய்து வருகிறது. அதைப் போலவே இத்திட்டத்திற்காக 2019-2020-ஆம் ஆண்டிற்கும் ரூ.50 கோடி அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் நில மேம்பாட்டுத் திட்டம், கூரை வீடுகளைச் சீரமைப்பு செய்தல், சாலைப் பணிகள், அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளை மேம்படுத்துதல், குடிநீர் வசதி, பழங்குடியினர் மேம்பாட்டிற்கான பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் வழங்குதல் ஆகிய பணிகள் தாட்கோ மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

2018–19–ஆம் நிதியாண்டில் இத்திட்டத்தின் கீழ் பின்வரும் பணிகளை மேற்கொள்ள ஆணைகள் வெளியிடப்பட்டு பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.



- நீலகிரி மாவட்டத்தில் வசித்து வரும் பழங்குடியினரான தோடா, கோத்தா, இருளர், காட்டுநாயகன், குரும்பாஸ் மற்றும் பனியன் இனப் பழங்குடியினரின் 500 குடியிருப்புகளை ரூ5,00,00,000/– (ரூபாய் ஐந்து கோடி) செலவில் பழுதுபார்த்தல்.
- திருவண்ணாமலை, விழுப்புரம், சேலம், தருமபுரி மற்றும் வேலூா் மாவட்டங்களில் உள்ள பழங்குடியினருக்காக (ஒரு மாவட்டத்திற்கு 50 வீடுகள் வீதம்) மொத்தம் 250 வீடுகள் ரூ.7.50 கோடி மதிப்பில் கட்டுதல், இம்மாவட்டங்களில் 25 சுய உதவிக் குழுக்களை ஏற்படுத்தி அவர்கள் பயிற்சி பெற்ற தொழில்களை துவங்க ரூ.2.50 கோடி நிதியுதவி வழங்குதல்.
- பழங்குடியினருக்கான பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களை ரூ.10 கோடி செலவில் தாட்கோ மூலம் செயல்படுத்துதல்.
- இரண்டு அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடத் தொடக்கப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாகவும், 3 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட நடுநிலைப்

பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும் ரூ.3.79 கோடி செலவில் நிலை உயர்த்துதல்.

- ஏற்கனவே 57 பழங்குடியினர் உண்டி உறைவிட பள்ளிகளில் தோற்றுவிக்கப்பட்டு இருந்த மெய்நிகர் கலந்தாய்வு வகுப்பறைகளை மேம்படுத்தி சென்னை மாவட்டம், நந்தனம் அரசு பழங்குடியினர் தொடக்கப் பள்ளியில் ஒரு முதன்மை / தலைமை மெய்நிகர் கலந்தாய்வு வகுப்பறை மையத்தினை ரூ.1 கோடி செலவில் ஏற்படுத்துதல்.
- வேலை வாய்ப்பற்ற பழங்குடியின மக்கள் அரசு மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் வேலையில் சேர நடத்தப்படும் போட்டித் தேர்வுகளுக்கு தங்களை தயார் படுத்திட ஏதுவாக 10 மாவட்டங்களில் ரூ.35 இலட்சம் செலவில் 10 இலவச பயிற்சி மையங்கள் துவங்குதல்.
- அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் கல்வி மற்றும் விளையாட்டில் முன்னேற்றம் அடைவதற்கென திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் விளையாட்டுத் திறன் மேம்பாட்டு சிறப்பு மையமும் (Centre of Excellence in Sports) மற்றும் கோயம்புத்தூர் மாவட்டத்தில் அறிவுத்திறன் வளர்ச்சி சிறப்பு மையமும் (Centre of Excellence in Academic) ஏற்படுத்தி அம் மையங்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் தலா ரூ.25 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.50 இலட்சம் செலவில் ஏற்படுத்தி தர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்களிடையே பள்ளி, மாவட்ட, மாநில அளவில் விளையாட்டுப் போட்டிகள் ரூ.43.20 இலட்சம் செலவில் நடத்துதல்.
- அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் பயிலும் மாணாக்கரிடையே பள்ளி/ மாவட்ட/ மாநில அளவில் கட்டுரைப் போட்டி, பேச்சுப்போட்டி, ஒப்புவித்தல் போட்டி, வினாடி வினா மற்றும் பகுப்பாய்வுத்திறன் (Analytical) போன்ற போட்டிகளை ரூ.22.10 இலட்சம் செலவில் நடத்துதல்.
- அனைத்து பழங்குடியினர் நலத் திட்டங்களையும் பழங்குடியின மக்கள் பெற Online மூலம் விண்ணப்பிக்க இணையதள வசதியை ரூ.8.50

இலட்சம் செலவில் ஏற்படுத்துதல்.

- வேலூர் மாவட்டம், ஏலகிரி மலை, அத்தனாவூரில் 80 பழங்குடியினர் பள்ளி மாணவியர் பயன்பெறும் வகையில் புதிய பழங்குடியினர் நல விடுதியினை ரூ.1.35 கோடி மதிப்பீட்டில் கட்டுதல்.

## (ஆ) ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் (ITDP)

பழங்குடியின மக்கள் ஒன்றிணைந்து வாழ்வதை மேம்படுத்தும் வகையில், கீழே குறிப்பிடப்பட்டுள்ள 7 மாவட்டங்களில், அப்பகுதியின் மொத்த மக்கள் தொகையில் 50 விழுக்காடு மற்றும் அதற்கு மேல் பழங்குடியினர் வாழும் 10 பகுதிகளில், இவ்வரசால் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது:

| | |
|---|---|
| 1. சேலம் | – ஏற்காடு, பச்சமலை, அருநூத்துமலை மற்றும் கல்ராயன்மலை |
| 2. நாமக்கல் | – கொல்லிமலை |
| 3. விழுப்புரம் | – கல்ராயன்மலை |
| 4. திருவண்ணாமலை | – ஜவ்வாதுமலை |
| 5. திருச்சிராப்பள்ளி | – பச்சமலை |
| 6. தர்மபுரி | – சித்தேரி மலை |
| 7. வேலூர் | – ஜவ்வாது மற்றும் ஏலகிரிமலை |



ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டு திட்டப்பகுதிகளில், பழங்குடியின மக்களுக்கான நலத்திட்டப் பணிகளை செயல்படுத்திட மேற்குறிப்பிட்ட மாவட்டங்களில் 7 திட்ட அலுவலகங்கள் அரசாணை (நிலை) எண்.34 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந1) துறை, நாள்.25.04.2017-இன்படி தோற்றுவிக்கப்பட்டு திட்ட அலுவலர்களின் தலைமையின் கீழ் செயல்பட்டு வருகின்றன.

## இ) தொழில் நெறி வழிகாட்டும் மையம் (Vocational Guidance Centre)

பழங்குடியின இளைஞர்கள் தமது வேலை மற்றும் தொழிலினை தேர்ந்தெடுத்திட அவர்களுக்கு வழிகாட்டும் பொருட்டு ஒரு தொழில்நெறி வழிகாட்டும் மையம் நீலகிரி மாவட்டம், உதகமண்டலத்தில் இயங்கி வருகிறது.

2019–2020–ஆம் நிதியாண்டில் இம்மையத்தின் செயல்பாட்டுக்காக ரூ.75.25 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## (ஈ) தொழிற்பயிற்சி நிலையங்கள் (ITIs)

பழங்குடியினருக்கென பிரத்தியேகமாக ஆறு தொழிற்பயிற்சி நிலையங்கள் சேலம் மாவட்டம் கருமந்துறை, நாமக்கல் மாவட்டம் கொல்லிமலை, திருவண்ணாமலை

மாவட்டம் ஜமுனாமரத்தூர், கோயம்புத்தூர் மாவட்டம் ஆனைக்கட்டி, நீலகிரி மாவட்டம் கூடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டம் சங்கராபுரம் ஆகிய இடங்களில் இயங்கி வருகின்றன.

2019–2020–ஆம் நிதியாண்டில் இந்த 6 தொழிற்பயிற்சி நிலையங்களின் செயல்பாட்டுக்கென ரூ.9.81 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 4. பழங்குடியினர் சாதிச் சான்றிதழ் மெய்த்தன்மை சரிபார்த்தல்

பழங்குடியினர்களுக்கான சாதிச் சான்றிதழின் மெய்த்தன்மையினை சரிபார்த்து வழங்குவது இத்துறையின் ஒரு முக்கிய பணியாகும்.

i. பழங்குடியினர்களுக்கான சாதி சான்றிதழ் வழங்கும் அதிகாரம் வருவாய் கோட்டாட்சியர் / சார் ஆட்சியருக்கு வழங்கப்பட்டுள்ளது.

ii. அவர்கள் சான்று வழங்க மறுக்கும் பட்சத்தில், மாவட்ட ஆட்சியரிடம் மேல்முறையீடு செய்வதன் மூலமும், அதன் பின்னரும் குறைகள் ஏதுமிருப்பின் மாநில கூர்ந்தாய்வு குழுவினையும் (SLSC) அணுகலாம்.



iii. பழங்குடியினர்களுக்கு வழங்கப்பட்ட சாதி சான்றிதழ்களின் மெய்த்தன்மையினை அறிய மாநில அளவில் கூர்நோக்குக் குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவின் விவரம் பின்வருமாறு:

### மாநில அளவிலான கூர்நோக்கு குழு

| | | | |
|---|---|---|---|
| 1 | அரசு செயலாளர், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை | தலைவர் | பழங்குடியினர் என வழங்கப்பட்ட சாதிச் சான்றிதழ்களின் மெய்த்தன்மையினை கூர்ந்தாய்வு செய்து இறுதி ஆணை பிறப்பிக்கும். இந்த ஆணையினை ஏற்கவில்லையெனில் இந்திய அரசியல் அமைப்புச் சட்டக்கூறு 226–இன்படி உயர் நீதிமன்றத்திலும், கூறு 136–இன்படி உச்ச நீதிமன்றத்திலும் மேல்முறையீடு செய்யலாம். |
| 2 | இயக்குநர், பழங்குடியினர் நலம் | உறுப்பினர் செயலர் | |
| 3 | மானுடவியல் வல்லுநர் | உறுப்பினர் | |

### கண்காணிப்புப் பிரிவுகள்.

பழங்குடியினரின் சாதிச் சான்றிதழின் உண்மைத் தன்மையை அறிந்திட, கள ஆய்வு செய்து, சரிபார்த்து, மாநில கூர்நோக்குக் குழுவிற்கு அறிக்கை அளிக்க ஏதுவாக

**சென்னை, சேலம், திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரை** ஆகிய நான்கு மண்டலங்களில் **கண்காணிப்புப் பிரிவுகள்** செயல்பட்டு வருகின்றன. ஒவ்வொரு கண்காணிப்புப் பிரிவும் கீழ்க்கண்ட காவல்துறை அலுவலர்களைக் கொண்டு செயல்படுகிறது :

| வ. எண் | பதவியின் பெயர் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | முதுநிலை காவல் துணை கண்காணிப்பாளர் | 1 |
| 2. | காவல் ஆய்வாளர் அல்லது சார் காவல் ஆய்வாளர் | 1 |
| 3. | தலைமைக் காவலர் | 1 |

பழங்குடியினரின் சாதிச் சான்றிதழின் உண்மைத் தன்மை அறியும் பொருட்டு பல கோப்புகள் நிலுவையில் உள்ளதால், அரசாணை (நிலை) எண்.50, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள். 28.07.2017–இன்படி நான்கு மண்டல கண்காணிப்புப் பிரிவுகளுடன், கூடுதல் காவல்துறை இயக்குநர் அவர்களின் தலைமையின் கீழ் அனைத்து மாவட்டங்களிலும் இயங்கி வரும் 38 சமூக நீதி மற்றும் மனித உரிமைப்பிரிவுகளும் (மாவட்டங்களில் **31** பிரிவுகள் மற்றும் மாநகராட்சி பகுதிகளில் 7 பிரிவுகள்) அவர்களின் பணிகளுடன் கூடுதலாக பழங்குடியினர் சாதிச் சான்றிதழ் மெய்த்தன்மை அறிதல் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். மேலும், கண்காணிப்புப் பணியாளர்களுக்கு உதவிபுரியும் வகையில் அரசாணை (ப) எண். 263, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 26.10.2017–இன்படி 10 மானுடவியல் வல்லுநர்களும் பணியமர்த்தப்பட்டுள்ளனர். பழங்குடியினரின் சாதிச் சான்றிதழின் உண்மைத் தன்மையை அறிய மத்திய / மாநில அரசு, அரசு சார்ந்த நிறுவனங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களால் மாநில கூர்நோக்குக் குழுவிற்கு அனுப்பப்படும் கோரிக்கைகளை பழங்குடியினர் நல இயக்குநர் வழியாக உரிய காவல் துணை கண்காணிப்பாளருக்கு சாதி நிலை குறித்து கள ஆய்வு மற்றும் அறிக்கை சமர்ப்பிக்கும் பொருட்டு மாநில கூர்நோக்குக் குழு பரிந்துரை செய்யும்.

மாநில கூர்நோக்குக் குழுவில் ஆயிரக்கணக்கில் கோரிக்கைகள் நிலுவையில் உள்ளதால், அரசாணை (நிலை) எண்.**40**, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள்.**13.07.2018**–இன்படி அரசு கூடுதல் செயலாளர்கள் தலைமையில் கூடுதலாக **2** மாநில அளவிலான கூர்நோக்குக் குழுக்களை அமைத்து செயல்பட்டு வருகிறது.

## 5. பழங்குடியினர் ஆராய்ச்சி மையம்

பழங்குடியினர் பற்றிய விவரங்களைச் சேகரிக்கவும், அவர்களின் வாழ்க்கை முறை, கலாச்சாரம், மொழி, சமூக, பொருளாதார மற்றும் கல்வி நிலை குறித்து ஆராய்ச்சி செய்வதற்காகவும், மைய அரசின் நிதியுதவியுடன் **1983** ஆம் ஆண்டு நீலகிரி மாவட்டம், உதகமண்டலத்தில் முத்தோரை பாலாடா என்ற இடத்தில் "பழங்குடியினர் ஆராய்ச்சி மையம்" அமைக்கப்பட்டது. இம்மையம், மானுடவியல் நிபுணத்துவம் வாய்ந்த இயக்குநரின் தலைமையில் செயல்பட்டு வருகிறது. இம்மையத்தின் நிர்வாகச் செலவினங்கள் மாநில அரசால் ஏற்றுக் கொள்ளப்படும் வேளையில் இம்மையத்தின் நடவடிக்கைகள் குறித்த செலவினங்கள் மைய அரசின் பழங்குடியினர் விவகார அமைச்சகத்தால் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

தமிழகத்தில் உள்ள பழங்குடியினரின் வாழ்க்கை முறை மற்றும் கலாச்சாரம் குறித்த நூல்களை பதிப்பித்தல் நாட்டுபுறப்பாடல்கள், கதைகள் சேகரித்தல் மற்றும் அழிந்து வரும் நிலையில் உள்ள பண்டைய பழங்குடியினரின் மொழிகளையும், கலாச்சாரத்தையும் பதிவு செய்தல் மற்றும்



பாதுகாத்தல், ஆகிய பணிகளை பழங்குடியினர் ஆய்வு மையம் மேற்கொண்டு வருகிறது.

பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளில் அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்களால் செயல்படுத்தப்படும் வளர்ச்சி திட்டங்களை மதிப்பீடு செய்தல், பழங்குடியினரின் வளர்ச்சிக்கான பிரச்சனைகள் குறித்த கருத்தரங்குகள் மற்றும் பயிற்சிப் பட்டறைகள் நடத்துதல், பழங்குடியினரின் கலாச்சாரம் மற்றும் வளர்ச்சியை கருத்தில் கொண்டு அவர்களின் மேம்பாட்டிற்கான நோக்கு நிலை பயிற்சி வழங்குதல் ஆகிய நடவடிக்கைகள் பழங்குடியினர் ஆய்வு மையத்தால் மேற்கொள்ளப்படுகின்றன.

**1996–**ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்ட பழங்குடியினர் அருங்காட்சியகம் பழங்குடியினர் ஆய்வு மையத்தின் வளாகத்தில் அமைந்துள்ளது. இம்மையத்தில் பழங்குடியினர் குறித்த கலைப்பொருட்கள் மற்றும் புகைப்படங்கள் அக்ரிலிக் உறையில் பாதுகாக்கப்பட்டு சூரிய மின்சார வசதியுடன் கூடிய ஒரு திறந்த வெளி அருங்காட்சியகத்தில் கண்காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

**2018–2019–**ஆம் ஆண்டில் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக பழங்குடியினர் ஆய்வு மையத்திற்கு மைய அரசின் பழங்குடியினர் விவகாரங்கள் அமைச்சகத்தால் ரூ.**1.77** கோடி நிதி விடுவிக்கப்பட்டுள்ளது.

**2019–2020–**ஆம் நிதியாண்டில் இம்மையத்தின் நிர்வாகச் செலவுகளுக்காக ரூ.**1.64** கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், ரூ.**3.80** கோடி மதிப்பிலான செயல்திட்டம் தயாரிக்கப்பட்டு நிதி விடுவிப்புக்காக மைய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

## 6. பழங்குடியினர் துணைத் திட்டம்

பழங்குடியினரின், சமூக, கல்வி மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்கென மாநில ஆண்டுத் திட்ட நிதி ஒதுக்கீட்டில் மாநிலத்தில் உள்ள பழங்குடியின மக்கள் தொகைக்கேற்ப நிதி ஒதுக்கீடு செய்ய வழி வகுக்கும் பழங்குடியினர் துணைத் திட்டம் 1976-77 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பழங்குடியினர் துணைத் திட்டத்தின் கீழ் 2019-2020-ஆம் நிதியாண்டில், மாநில ஆண்டுத் திட்ட ஒதுக்கீடான ரூ.**56,849.96** கோடியில், ரூ.**1277.84** கோடி **(2.25** விழுக்காடு**)** ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்நிதியானது, தமிழ்நாட்டிலிருக்கும்



பழங்குடியின மக்கள் தொகை விழுக்காட்டை (1.10%) காட்டிலும் அதிகமாகும்.

மாநில அளவில் பழங்குடியினர் துணைத் திட்டத்தின் கீழ் திட்டங்களை வகுக்கவும், செயல்படுத்தவும் இத்துறை ஒருங்கிணைப்புத் துறையாகவும் இத்துறையின் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் ஒருங்கிணைப்பு அலுவலராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். இத்துணைத் திட்டத்தை மாவட்ட அளவில் கண்காணிக்கவும், ஆய்வு செய்யவும் பழங்குடியினர் நல இயக்குநர், கண்காணிப்பு அலுவலராக நியமிக்கப்பட்டுள்ளார். ஒருங்கிணைப்பு அலுவலர் துறைத் தலைமை அலுவலர்களுடன் இணைந்து ஒதுக்கீட்டின் மீதான செலவினப் போக்கினை கண்காணித்து வருகிறார்.

43 துறைகளை உள்ளடக்கிய 17 செயலாக்கத் துறைகள் வாயிலாகப் பழங்குடியினர் துணைத் திட்டம் பழங்குடியினரின் மேம்பாடு மற்றும் நலனுக்காகச் செயல்படுத்தப்படுகிறது. செயலாக்கத் துறைகளால் நியமிக்கப்பட்ட ஒருங்கிணைப்பு அதிகாரிகள் பழங்குடியினருக்கான திட்டங்களைச் சிறப்பாக செயல்படுத்துவதற்காக பழங்குடியினர் நலத்துறையுடன் இணைந்து செயலாற்றி வருகின்றனர்.

# III. தமிழ் நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ)

## முன்னுரை

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ) 1974 ஆம் ஆண்டு ஒரு கட்டுமான நிறுவனமாக இந்திய நிறுவனச் சட்டம், 1956–இன் கீழ் ரூ.1 கோடி பங்கு மூலதனத்துடன் துவங்கப்பட்டது. பின்னர் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் சமூக, பொருளாதார வளர்ச்சிக்காக பல்வேறு வருவாய் ஈட்டும் திட்டங்கள் செயல்படுத்துதல் மற்றும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரை சமூகத்தின் இதர பிரிவினருக்கு சமமாக முன்னேற்றும் வகையில் அவர்களுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் வழங்குதல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வண்ணம் இந்நிறுவனத்தின் நடவடிக்கைகள் விரிவடைந்துள்ளன.

## 1. பங்கு மூலதனம்

இக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் முறையே ரூ.150 கோடி



மற்றும் ரூ.141.53 கோடி ஆகும். 1980ஆம் ஆண்டிலிருந்து இக்கழகத்தின் செலுத்தப்பட்ட மூலதனத்தை மாநில அரசும், மத்திய அரசும் 51:49 என்ற விகிதத்தில் பகிர்ந்தளிக்கின்றன.

## 2. தாட்கோவின் நடவடிக்கைகள்

1. பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்துதல்.
2. பயிற்சி மற்றும் திறன் மேம்பாடு
3. கட்டுமானப் பணிகளை மேற்கொள்ளுதல்.

## 2.1 பொருளாதார மேம்பாட்டு நடவடிக்கைகள்

இக்கழகத்தின் மேம்பாட்டுப் பிரிவு ரூ.1 இலட்சத்திலிருந்து ரூ.3 இலட்சம் வரை ஆண்டு வருமானம் பெறும் சமூகத்தின் வறிய நிலையில் இருக்கும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் பொருளாதார மேம்பாட்டுக்காக தேவையின் அடிப்படையிலான பல்வேறு பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களை வகுத்து செயல்படுத்தி வருகிறது.

இம்மக்களின் பொருளாதார மேம்பாட்டில் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளும், கூட்டுறவு வங்கிகளும் முக்கிய பங்கு வகிக்கின்றன. மூலதனச் சொத்துக்களை

உருவாக்க வங்கிகளிடம் நிதி உதவி பெற்றிட இவ்வரசு திட்டச் செலவினத்தில் 30 விழுக்காடு அல்லது அதிகபட்சம் ரூ.2.25 இலட்சம் மானியமாக வழங்குகிறது. இது அவர்களின் சமூக பொருளாதார நிலையில் நல்ல மாற்றத்தினை உருவாக்கியுள்ளது.

2018–2019–ஆம் ஆண்டில் 7915 நபர்களுக்கு கடனாக ரூ.71.05 கோடி வழங்கப்பட்டது. மேலும் ரூ.44.80 கோடி மானியத்திற்காக விடுவிக்கப்பட்டுள்ளது.

## அ. மானியத்துடன் கூடிய கடன் திட்டங்கள்

### (i) நிலம் வாங்கும் திட்டம்

நில உடைமை சமூக நிலை உயர்வினை காட்டும் அளவு கோல் என்பதால், ஆதிதிராவிடர் மகளிரின் நில உடைமையினை அதிகரிக்கவும், அவர்களின் பெயரிலேயே நிலம் வாங்கிட வழிவகுக்கும் சிறப்புத் திட்டம் 2004–2005ஆம் ஆண்டு முதல் அறிமுகப்படுத்தப்பட்டது.

ஆதிதிராவிடர் இனத்தை சேர்ந்த ஆண் மற்றும் மூன்றாம் பாலினத்தவருக்கும் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

### இத்திட்டத்தின் சிறப்பு அம்சங்கள்



- நிலம் ஆதி திராவிடர் பயனாளி பெயரில் பதிவு செய்யப்படுகிறது.
- இத்திட்டத்தின் கீழ் ரூ.1 இலட்சம் மதிப்புக்குட்பட்ட நிலத்திற்கு முத்திரைத்தாள் மற்றும் பதிவுக் கட்டணத்திலிருந்து 100 விழுக்காடு விலக்கு அளிக்கப்படுகிறது.
- ஆதிதிராவிடர் அல்லாத பிற இனத்தவரிடமிருந்து நிலம் வாங்கப்பட வேண்டும்.

### (ii) நில மேம்பாட்டுத் திட்டம்

நிலப் பயன்பாட்டை அதிகரிப்பதோடு, ஆழ்துளைக் கிணறு அமைத்தல் / திறந்தவெளிக் கிணறுகள், விசைக்கிணறுகள், சொட்டு நீர்ப்பாசனம் மற்றும் சுழற்சி முறை பாசனம் உள்ளிட்ட நீர்ப்பாசன வசதிகளுக்காக வங்கி மூலம் மானியத்துடன் கூடிய கடனுதவிகள் வழங்குவதன் அடிப்படையில் வருமானம் ஈட்ட வழி செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

2019-2020-ஆம் நிதியாண்டில் 200 பயனாளிகளுக்கு மானியம் வழங்க ரூ.3 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### (iii) தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம்

ஆதி திராவிட மக்களின் வறிய நிலையைக் குறைக்க 18 வயது முதல் 65 வயது வரை உள்ள ஆதி திராவிடர் பயன் பெறும் வகையில் அவர்களது கல்வித்தகுதியை கருத்தில் கொள்ளாமல் பல்வேறு தொழில்களுக்கு நிதியுதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் தனி நபர் மற்றும் குழுக்கள் பயன் பெறுகின்றனர்.

2019-2020-ஆம் நிதியாண்டில் இத்திட்டத்தின் கீழ் 5050 பயனாளிகளுக்கு, மானியம் வழங்கிட ரூ.67.12 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### (iv) தொழில் முனைவோர் சிறப்புத் திட்டம் – பெட்ரோல், டீசல் மற்றும் எரிவாயு சில்லறை விற்பனை நிலையம் அமைப்பதற்கான நிதியுதவி

பெட்ரோல், டீசல் மற்றும் எரிவாயு சில்லறை விற்பனை நிலையம் அமைப்பதற்கு நிதி உதவி வழங்கும் இச்சிறப்புத் திட்டம் 2012-2013 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. ஆதிதிராவிட மக்கள், எண்ணெய் நிறுவனங்களின் முகவர்களாக நியமனம் செய்ய விண்ணப்பிக்கும் பொழுதே ‘அ’ மற்றும் ‘ஆ’ வகைப்பாட்டில் (A & B Category) பெட்ரோல்/ டீசல் / எரிவாயு சில்லரை விற்பனை நிலையம் அமைக்க உதவும் வகையில், தேவையான நிலம்



வாங்குவதற்கும், வங்கி உத்தரவாதத்திற்குத் தேவையான வைப்புத்தொகைக்காகவும் நிதியுதவி அளிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. முகவர்களாகத் தெரிவு செய்யப்பட்ட பின் நடப்பு மூலதனத்திற்காக (working capital) நிதியுதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ், எண்ணெய் நிறுவனத்தால் தெரிவு செய்யப்படும் முன்பும் அல்லது தெரிவு செய்யப்படும் பொழுதும் பயன் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

2019-2020-ஆம் நிதியாண்டில் 10 நபர்களுக்கு மானியம் வழங்கிட ரூ.22.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### (v) இளைஞர்களுக்கான சுய வேலைவாய்ப்புத் திட்டம்

படித்த வேலையற்ற 18 வயது முதல் 45 வயதிற்குட்பட்ட ஆதிதிராவிடர் இளைஞர்கள் தங்களுக்குத் தெரிந்த / விருப்பமான தொழில் செய்ய நிதி உதவி, இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படுகிறது.

2019-2020-ஆம் நிதியாண்டில் 3253 நபர்களுக்கு மானியம் வழங்கிட ரூ.37.40 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### (vi) இளைஞர்களுக்கான சிறப்பு சுய வேலைவாய்ப்புத் திட்டம்

இத்திட்டத்தின் கீழ் மருத்துவம் (MBBS), பல் மருத்துவம் (BDS), சித்த மருத்துவம் (BSMS), ஆயுர்வேத மருத்துவம் (BAMS), இயற்கை மருத்துவம் மற்றும் யோகா (BNYS) ஆகிய படிப்புகளில் பட்டம் பெற்றவர்கள், சொந்தமாக மருத்துவ மையம் / ஆய்வகம் / மருந்தகம் அமைப்பதற்கு நிதி உதவி வழங்கப்படுகிறது. 2013-14ஆம் ஆண்டிலிருந்து இத்திட்டம் மருத்துவம்சார் தொழிற்கல்வி பயின்ற முட நீக்கு வல்லுனர், மருந்தாளுனர், கண்ணாடி வினைஞர் (optician) மற்றும் ஆய்வகத் தொழில்நுட்ப வல்லுநர்கள் சொந்தமாக மருத்துவ மையம் / கண் கண்ணாடி கடை / ஆய்வகம் / மருந்தகம் அமைப்பதற்கும் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. விண்ணப்பிப்பவர்கள் சம்மந்தப்பட்ட மன்றத்தில் (concerned council) பதிவு பெற்றவர்களாக இருக்க வேண்டும்.



இத்திட்டத்தின் கீழ் 2019-2020-ஆம் நிதியாண்டில் 50 பேருக்கு மானியம் வழங்க ரூ.75 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### (vii) சுய உதவிக் குழுக்களுக்கான பொருளாதார உதவித் திட்டம்

இத்திட்டத்தின் கீழ், ஆதிதிராவிடர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களது பொருளாதார ஆளுகையை மேம்படுத்திடும் பொருட்டு அவர்கள் வருமானம் ஈட்டத்தக்க தொழிலில் முதலீடு செய்வதற்காக குறைந்த வட்டியுடன் தேவையான நிதியுதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் இருமுறை தரநிர்ணயம் செய்யப்பட்ட ஆதிதிராவிடர் சுய உதவிக் குழுக்கள் தங்களது வருமானம் ஈட்டக்கூடிய தொழிலினை செய்வதற்காக போதுமான மற்றும் சரியான நேரத்தில், நியாயமான வட்டிக்கு கடன் வழங்கப்படுகிறது. தங்களுக்குத் தெரிந்த வருமானம் ஈட்டக்கூடிய தொழில் அல்லது வணிக நிறுவனத்தினை துவங்குவதற்காக திட்ட மதிப்பீட்டில் ஒவ்வொரு குழுவிற்கும் திட்டத்தொகையில் 50 விழுக்காடு அல்லது அதிகபட்சம் ரூ.2.50 இலட்சம் இவற்றுள் குறைவான தொகை மானியமாக வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் 2019-2020-ஆம் நிதியாண்டில் **5750** பயனாளிகள்/ உறுப்பினர்களைக் கொண்ட 350 சுய உதவிக் குழுக்களுக்கு திட்ட தொடக்க மானியமாக வழங்கிட ரூ.8 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## ஆ. முழு மானிய உதவித்திட்டங்கள்

வருமானம் ஈட்டும் தொழில்களுக்கு கடன் மற்றும் மானிய உதவி வழங்குவதோடு மட்டுமல்லாமல், குடிமைப்பணி தேர்வு எழுதுவோர் மற்றும் தங்களது தொழிலை ஏற்படுத்த ஆர்வமுள்ள ஆதி திராவிடர் இளைஞர்களுக்கும், வேறு எந்த திட்டங்களிலும் உதவிபெறாத மற்றும் மானியம் பெற தகுதியுடையவர் என கருதும் நபர்களுக்கும் 100 விழுக்காடு மானிய உதவியினை தாட்கோ வழங்குகிறது.

### (i) இந்திய குடிமைப் பணி முதன்மைத் தேர்வு எழுதுவோருக்கு நிதி உதவி

இந்திய குடிமைப் பணி முதனிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்ற ஆதிதிராவிடர் இளைஞர்கள் முதன்மைத் தேர்விற்கு தங்களை தயார்படுத்திக்கொள்ள (Main Examinations) ரூ.50,000/– நிதி உதவி வழங்கப்படுகிறது.



இத்திட்டத்தின் கீழ், 2019-2020-ஆம் நிதியாண்டில் 100 நபர்கள் நிதியுதவி பெறும் வகையில் ரூ.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### (ii) மாநில குடிமைப் பணிகள் தொகுதி–1 முதன்மைத் தேர்வு எழுதுவோருக்கு நிதியுதவி

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பெறும் மாநில குடிமைப் பணிகள் தொகுதி-1 தேர்வில் முதனிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்று முதன்மைத் தேர்வு எழுதும் ஆதிதிராவிடர் இளைஞர்களுக்கு ரூ.50,000/– நிதியுதவி வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ், 2019-2020-ஆம் நிதியாண்டில் 50 நபர்கள் நிதியுதவி பெறும் வகையில் ரூ.25 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### (iii) இளம் சட்டப் பட்டதாரிகளுக்கு சுயமாக தொழில் செய்வதற்காக நிதியுதவி

தமிழ்நாடு சட்டப் பல்கலைக் கழகம், நிகர் நிலைப் பல்கலைக்கழகம் மற்றும் சட்டப் பல்கலைக் கழகத்தின் அங்கீகாரம் பெற்ற சட்டக் கல்லூரிகளில் முறையான பாடத்திட்டத்தில் பயின்ற, 23 வயது முதல் 45 வயதிற்குட்பட்ட இந்திய பார் கவுன்சில் மற்றும் மாநில பார் கவுன்சிலில் பதிவு பெற்ற ஆதிதிராவிடர் சட்டப் பட்டதாரிகள் சுயமாகத் தொழில்

துவங்க இத்திட்டத்தின் கீழ் ஒரு முறை நிதியுதவியாக ரூ.50,000/– வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ், 2019-2020-ஆம் நிதியாண்டில் 500 நபர்கள் நிதியுதவி பெறும் வகையில் ரூ.2.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### (iv) பட்டயக் கணக்கர் / செலவுக் கணக்கர் சுயமாகத் தொழில் புரிய நிதி உதவி

பட்டயக் கணக்கர் / செலவுக் கணக்கர் சுயமாகத் தொழில் செய்வதை ஊக்குவிப்பதற்காக ரூ.50,000/– நிதியுதவி வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ், 2019-2020-ஆம் நிதியாண்டில் 10 பட்டயக் கணக்கர் / செலவுக் கணக்கர்களுக்கு (cost accountant) நிதியுதவி வழங்க ரூ.5 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### (v) விருப்புரிமை நிதி

### (அ) தாட்கோ தலைவர் விருப்புரிமை நிதி

2016-17-இல் அறிமுகப்படுத்தப்பட்ட தாட்கோ தலைவர் விருப்புரிமை திட்டத்தின் கீழ், ரூ.40,000/– நிதியுதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் அவசரகால நிவாரணம் வழங்குவதற்காக ரூ.1கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.



### (ஆ) தாட்கோ, மேலாண்மை இயக்குநரின் விருப்புரிமை நிதி

2012-13–இல் அறிமுகப்படுத்தப்பட்ட மேலாண்மை இயக்குநர் விருப்புரிமை திட்டத்தின் கீழ் ரூ.30,000/– நிதியுதவி வழங்கப்படுகிறது.

விதவைகள், மாற்றுத் திறனாளிகள், பெற்றோர் / பாதுகாவலர் இல்லாத குழந்தைகள், நலிந்த கலைஞர்கள், மருத்துவம் செய்ய இயலாத நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள் ஆகியோருக்கு முன்னுரிமை வழங்கப்படுகிறது. மேலும், திறன் மேம்பாட்டுப் படிப்பு, தொடக்கக் கல்வி முதல் தொழிற்கல்வி வரை தொடர்வதற்குத் தேவைப்படும் கூடுதல் நிதி உதவிகள், சாதிக் கலவரம் / தீ விபத்தில் பாதிக்கப்பட்ட மக்கள் மற்றும் தகுதி வாய்ந்தவர்களுக்கு தேவைக்கேற்ற உதவி, நடைமுறை விதிகளுக்குட்பட்டு இத்திட்டத்தின் மூலம் வழங்கப்படுகிறது.

2019-2020-ஆம் நிதியாண்டில் இத்திட்டத்தின் கீழ் ரூ.1.40 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## (இ) மாவட்ட ஆட்சியர் விருப்புரிமை நிதி

மாற்றுத் திறனாளிகள், ஆதரவற்ற விதவைகள், நலிந்த கலைஞர்கள், 30 வயதிற்கு மேற்பட்ட திருமணம் ஆகாத பெண்கள், பெற்றோர் / பாதுகாவலர் இல்லாத குழந்தைகள் மற்றும் மாவட்ட ஆட்சியாளர்களால் தகுதியானவர்கள் என கண்டறியப்படுபவர்கள் ஆகியோருக்கு முன்னுரிமை அளிக்கப்படும். இத்திட்டத்தின் கீழ், ஒருவருக்கு ரூ.20,000/– வரை நிதியுதவி வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ், 2019-2020-ஆம் நிதியாண்டில் 280 நபர்கள் நிதியுதவி பெறும் வகையில் ரூ.56 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## (vi) துரித மின் இணைப்புத் திட்டம்

ஆதிதிராவிடர் விவசாயிகள் துரித மின் இணைப்பு பெற்றிட மின்வாரிய வைப்பு தொகை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு வழங்கும் இத்திட்டம் 2007-2008- ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது.

2016-2017- ஆம் ஆண்டு முதல் இத்திட்டத்தின் கீழ் பயனாளி ஒருவருக்கு ரூ. 75,000/- என வைப்புத் தொகை உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.



இத்திட்டத்தின் கீழ், 2019-2020-ஆம் ஆண்டில் 1000 பேர் பயன்பெற ரூ.7.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## இ. பழங்குடியினருக்காகச் செயல்படுத்தப்படும் நிதியுதவித் திட்டங்கள்

பழங்குடியினருக்காக பின்வரும் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள் தாட்கோவால் 2012-2013 முதல் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

## (i) நிலம் வாங்கும் திட்டம்

நில உடைமை மகளிரது சமூக நிலையை உயர்த்தும் அளவுகோல் என்பதால் பழங்குடியின மகளிர், இத்திட்டத்தின் கீழ் நிலம் வாங்குவது ஊக்குவிக்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் அதிகபட்ச திட்டத் தொகையான ரூ.7.50 இலட்சத்தில் 50 விழுக்காடு மானியமாக வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் பழங்குடியினர் அல்லாதவர்களிடமிருந்து நிலம் வாங்கப்பட வேண்டும் என்ற கட்டுப்பாடு நடைமுறையில் உள்ளது.

## (ii) நில மேம்பாட்டுத் திட்டம்

பழங்குடியினர் தங்கள் நிலத்தை மேம்படுத்த நீராதாரங்களை உருவாக்குதல், பாசன வசதிகள் மற்றும் பாசனத்திற்காக மின்சார இணைப்புகள் அமைத்தல் உள்ளிட்ட நில மேம்பாட்டுத் திட்டங்களுக்காக இத்திட்டத்தின் கீழ் கடனுதவி வழங்கப்படுகிறது. அதிகபட்ச நிதியுதவியாக 50 விழுக்காடு மானியத்துடன் ரூ.7.50 இலட்சம் வழங்கப்படுகிறது.

## (iii) தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம் (EDP)

இத்திட்டத்தின் வாயிலாகப் பழங்குடியினர் தங்களது சமூக, பொருளாதார நிலையை உயர்த்திக் கொள்ளும் வகையில் வருமானம் ஈட்டக் கூடிய தொழில்களுக்கு கடனுதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் குறைந்தபட்ச திட்டத்தொகை ரூ.1.50 இலட்சம் ஆகும். திட்டத்தொகையில் 50 விழுக்காடு அல்லது அதிகபட்சமாக ரூ.3.75 இலட்சம் வரை மானியமாக நபர் ஒருவருக்கு வழங்கப்படுகிறது.



## (iv) பழங்குடியின இளைஞர்களுக்கான சுய வேலைவாய்ப்புத் திட்டம்

இத்திட்டத்தில் ஓட்டுனர் உரிமம் வைத்துள்ள பழங்குடியின இளைஞர்களுக்கு பயணியர் வாகனம் / ஈப்பு வாங்குவதற்கு நிதியுதவி வழங்கப்படுகிறது. திட்டத் தொகையில் 50 விழுக்காடு அல்லது அதிகபட்சமாக ரூ.4 இலட்சம் வரை மானியமும், கனரக வாகனத்திற்கு ரூ.5.50 இலட்சம் மானியமும் வழங்கப்படுகிறது.

## (v) மகளிர் குழுக்களுக்கான பொருளாதாரக் கடன்

பழங்குடியின மகளிரை மட்டும் உறுப்பினர்களாகக் கொண்ட சுய உதவிக் குழுக்கள், வருமானம் ஈட்டக்கூடிய தொழில்களான கைவினைப் பொருட்கள் செய்தல், தோட்டக்கலை, பூஞ்செடிகள் வளர்த்தல், சுற்றுலாத் தலங்களில் சிற்றுண்டி மற்றும் பிற கடைகள் அமைத்தல், சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் சார்ந்த தொழில்கள் செய்ய நிதியுதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ், திட்ட மதிப்பீட்டில் 50 விழுக்காடு அல்லது அதிகபட்சமாக ரூ.3.75 இலட்சம் மானியமாக விடுவிக்கப்படுகிறது.

### (vi) இந்திய குடிமைப்பணி/தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய தொகுதி–1 முதன்மைத்தேர்வு எழுதுவோருக்கு நிதியுதவி

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய தொகுதி-1 தேர்வு மாநில அளவிலான உயர்ந்த குடிமைப் பணி தேர்வாகும். தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத் தொகுதி–1 முதல்நிலைத் தேர்வில் வெற்றி பெற்று முதன்மை தேர்வு மற்றும் இந்திய குடிமைப்பணி முதன்மைத்தேர்வு (Main Exam) எழுதும் பழங்குடியின இளைஞர்களை ஊக்குவிக்கும் பொருட்டு 2015-16 ஆம் ஆண்டு முதல் ரூ.50,000/– நிதியுதவி அளிக்கப்படுகிறது.

### (vii) துரித மின் இணைப்பு திட்டம்

பழங்குடியின விவசாயிகள் துரித மின் இணைப்பு பெற நபர் ஒருவருக்கு ரூபாய் 75,000/- மின்வாரிய வைப்புத் தொகையாக செலுத்திட நிதியுதவி அளிக்கப்படுகிறது.

## 2.2 திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள்

ஆதிதிராவிடர் பழங்குடியினர் மற்றும் கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் இளைஞர்களுக்கு தகுதியான வேலை



வாய்ப்பினை உருவாக்கிடவும், வேலை போட்டிகளுக்கேற்ப அவர்கள் தங்கள் திறனை மேம்படுத்திக்கொள்ளும் வகையில், பல்வேறு திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் மூலம் அளிக்கப்படுகின்றன. இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு / சுய வேலைவாய்ப்பு ஏற்படுத்திட இப்பயிற்சிகள் மத்திய சிறப்பு நிதியுதவி திட்டத்தின் 10 விழுக்காடு நிதியினைக் கொண்டு வழங்கப்படுகின்றன.

### தாட்கோ மூலம் நடத்தப்படும் முக்கியமான பயிற்சிகள்

- மல்டிமீடியா & அனிமேஷன் (Multimedia & Animation)
- கட்டடக் கலை மற்றும் ஆட்டோ கேட் உடன் இணைந்த கட்டட 2D வரைகலை (Architectural & Civil 2D Drafting with AutoCAD)
- நவீன ஆடை தொழில்நுட்பம் (Fashion Technology)
- ஆடை வடிவமைப்பு (Apparel Pattern Making)
- அழகுக் கலை பயிற்சி (Beautician)
- முடி ஒப்பனையாளர் பயிற்சி (Hair Stylist)
- குளிர்சாதனப் பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு (Repair & Maintenance of Airconditioner)

- மின் வினைஞர் (Electrician)
- துணி வெட்டுதல் மற்றும் தையல் பயிற்சி (Cutting & Tailoring)
- கணினி வன்பொருள் மற்றும் இணைவமைவு (Computer Hardware & Networking)
- சில்லறை விற்பனை மேலாண்மை (Retail Management)
- தொலைத் தொடர்பு மேலாண்மை (Telecom management)
- சூரிய மின் நிறுவி மற்றும் சேவை அளிப்பவர் (Solar Electric installer & Service Provider)
- சுற்றுலா ஏஜென்ட் மற்றும் போக்குவரத்து பயண நடத்துனர் பயிற்சி (Tour Agent & Travel operator)
- கணக்காளர் (Accountant)
- பயணச்சீட்டு முன்பதிவு (Ticket Reservation)
- கை எம்ப்ராய்டரி (Hand Embroidery)
- பிளாஸ்டிக் செயல்முறை (Plastic Processing)
- ஊசி மோல்டிங் (Injection Moulding)
- பிளவு மோல்டிங் (Blow Moulding)
- இயந்திரம் இயக்குபவர் பயிற்சி (Machine Operator)



2013–2014 ஆம் ஆண்டு முதல் 2018-2019-ஆம் ஆண்டு வரை ரூ.41.02 கோடி செலவில் 100 நிறுவனங்கள் மூலம் 27,711 நபர்கள் பயிற்சி பெற்றுள்ளனர்.

## 2.3. கட்டுமானப் பிரிவு

தாட்கோ நிறுவனத்தின் கட்டுமானப் பிரிவு, இத்துறையால் நடத்தப்படும் பள்ளிகள் மற்றும் விடுதிகளின் கட்டுமானப் பணிகளையும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலனுக்காக நவீன சமுதாயக் கூடங்கள் கட்டும் பணிகளையும் மேற்கொண்டு வருகிறது. மேலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் குடியிருப்புகள் மற்றும் ஆதிதிராவிடர் நலப் பள்ளிகள் மற்றும் பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளுக்கு அடிப்படை உட்கட்டமைப்பு மேம்படுத்துதல் மற்றும் கூடுதல் அடிப்படை வசதிகளை ஏற்படுத்துதல் முதலிய பணிகளையும் மேற்கொண்டு வருகிறது.

### (i) மைய அரசின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படும் பணிகள்

ஆதிதிராவிட மாணவ, மாணவியருக்கு பாபு ஜெகஜீவன் ராம் சத்ரவாஸ் யோஜனா திட்டம் மூலம் விடுதிக் கட்டடங்கள், பழங்குடியின மாணாக்கர்களுக்கு ஏகலைவா மாதிரி உண்டு

உறைவிடப் பள்ளிக் கட்டடங்கள் மற்றும் வன்பந்து கல்யான் யோஜனா திட்டத்தின் கீழ் கூடுதல் வகுப்பறைகள், மற்றும் ஆய்வகக் கட்டடங்கள் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## (ii) மாநில அரசின் நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும் பணிகள்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணாக்கருக்கான தொழிற்பயிற்சி நிலையக்கட்டடம், விடுதிகளில் அமைக்க பெற்றிருக்கும் RCC அலமாரிகளுக்கு தனித்தனி இரும்புக் கதவு மற்றும் பூட்டு சாவி வசதி ஏற்படுத்துதல், ஆதிதிராவிடர் நல மற்றும் பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் கூடுதல் வகுப்பறைகள், ஆய்வுக் கூடங்கள், விடுதிகள், பணிபுரியும் மகளிர் தங்கும் விடுதிகள், சுற்றுச்சுவர், நவீன சமுதாயக் கூடங்கள், கழிப்பறைகள் கட்டுதல், தார் சாலைகள் அமைத்தல் மற்றும் புதுப்பித்தல், பழங்குடியினர் விடுதிகள் பராமரிப்பு மற்றும் பழுது நீக்குதல் போன்ற பணிகள் மாநில அரசுத் திட்டங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



## (iii) ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி திட்டப் பணிகள் (நபார்டு)

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணாக்கரின் நலனுக்காக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல விடுதிக் கட்டடங்கள், பள்ளிக் கட்டடங்களுக்கு கூடுதல் வகுப்பறைகள், ஆய்வுக் கூடங்கள் கட்டுதல், அடிப்படை வசதிகளான சுற்றுச்சுவர், தண்ணீர் வசதி, கழிவறைக் கூடம் ஆகியவற்றை ஏற்படுத்துதல் மற்றும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளில் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் ஆகிய பணிகளை நபார்டு வங்கியின் ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதித் திட்டங்களின் கீழ் மேற்கொள்ள ஆணையிடப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

தாட்கோ கட்டுமானப் பிரிவு மூலம் தற்போது பல்வேறு திட்டங்களின் கீழ் ரூ.339.69 கோடி மதிப்பிலான 476 பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## IV. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைக்கு 2019-2020ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கீடு

(ரூபாய் . கோடியில்)

| வ. எண். | அலுவலகங்கள் | வருவாய் | மூலதனம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | தலைமைச் செயலகம் | 8.79 | 0 | 8.79 |
| 2 | ஆதி திராவிடர் நலத்துறை | 3218.69 | 100 | 3318.69 |
| 3 | பழங்குடியினர் நலத்துறை | 454.78 | 28.02 | 482.80 |
| மொத்தம் | | 3682.26 | 128.02 | 3810.28 |

**வி.எம். ராஜலெட்சுமி**
ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர்
நலத்துறை அமைச்சர்